44

APPROVED BY THE MADRAS TEXT-BOOK COMMITT

உ

கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

## மலர் 3.

154

(சித்திரப் படங்களுடன்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 FEB 1926
MADRAS



மூன்றாம் பதிப்பு.

...ப்ரமண்யம் அண்டு ஸன்,
...ம்பகோணம்.

N25
121025

1925 விலை அணா 4

உ

கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

(படங்களுடன்.)

## மலர் 3.



மூன்றாம் பதிப்பு.

தி. கி. சுப்ரமண்யம் அண்டு ஸன்,
கும்பகோணம்.

1925

காபிரைட்] [விலை அணா 4]

# மஹான்களின் சரிதம்.

## மலர் III.


முதல் பதிப்பு 1925௵ ஜனவரி௴

இரண்டாம் பதிப்பு 1925௵ ஜூன்௴

மூன்றாம் பதிப்பு 1925௵ டிசம்பர்௴

# முன்னுரை

"மஹான்களின் சரிதம்" என்ற வரிசையில் வரும் புஸ்தகங்களிலுள்ள கதைகள் பழையனவே. ஆயினும் நமது நாட்டுச் சிறுவர் சிறுமியர்களுக்குப் பக்தி, மரியாதை, அன்பு, உண்மை முதலிய நற்குணங்கள் உண்டாகுமாறு அவை இவ் வரிசையில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. அன்றியும், இவை தஞ்சை ஜில்லா வித்தை இலாகா அதிகாரியாக இருந்த ஸ்ரீமான் **C. D.** சுப்பிரமணிய செட்டியார் (M.A., I.E.S) அவர்கள் இந்த ஜில்லாக் கல்வி உத்தியோகஸ்தர்களை ஆரம்பப் பாடசாலைகளுக்காகத் தயார் செய்யச் சொன்ன விரிவான பாடதிட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் பெரியோர்களின் சரித்திரங்களாகவே எழுதப்பட்டுள்ளன. இவ் வரிசையில் முதல், இரண்டு மலர்களில் வேறு பல கதைகள் விரவியிருப்பினும் பாக்கி மூன்று மலர்களில் அமைந்திருக்கும் பெரும்பான்மையை நோக்கி "மஹான்களின் சரிதம்" என்ற இப் பெயர் கொடுக்கப்பட்டது. அந்த அந்த வகுப்புக்கு உள்ள ஸ்தோத்திரப் பாடல்களையும் நாகை வட்டம் பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ வே. முத்துஸாமி ஐயர் (M.A., L.T.,) அவர்கள் வெளியிட்டிருக்கிற விரிவான பாடதிட்டத்தில் உள்ளபடி அச்சிட்டிருக்கிறோம். இப் புத்தகங்கள் வெளிவருமாறு எமக்கு உதவி புரிந்த கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ ஊ சா. வேங்கடராம ஐயர் அவர்கள்பால் நாம் என்றும் நன்றி பாராட்டுவோமாக. நமது நாட்டு வித்தியாபிமானிகள் எம்மை ஆதரித்ததின் பயனாக முற் பதிப்புக்கள் அதிவிரைவில் செலவானதுபற்றி இம் மூன்றாம்பதிப்பு முதல் இரண்டு பதிப்புக்களிலும் திருத்தமாக வெளிவரலாயிற்று.

நமது நாட்டு வித்தியாபிமானிகளை இதிலுள்ள குற்றங் குறைகளை நீக்கி எமக்கு ஊக்கமளித்து உதவிபுரியுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

கும்பகோணம், 4-12-1925. இங்ஙனம்,

தி. கி. சுப்ரமண்யம் அண்டு ஸன்.

SIR,

It is with great pleasure that we wish to inform you that we have published in Tamil a series of books on Moral Instruction under the name of "Mahangalin Charitham" (I-V.) treating about the lives of our Saints and Great Men and Women. The lives of the Founders of the Three Great Religions (Christianity, Muhamadanism and Buddhism) have also been included.

These books have been written in a graded manner to suit the pupils of the lower classes. The language is simple and the choice of the subjects is what it ought to be. They have been written with a view to teach youngsters what our country was, how men born in humble families became great and now if pupils emulate their example, they too may become eminent.

And further, a few songs of saints and poets in praise of God have been included at the end of each book for class use and recitation. In order to make the book attractive and readable, good wrappers and paper have been used and it has been printed in bold type with Half-tone pictures in this third edition. The books have been so priced that they can be within the easy reach of even the poorest.

Further, we have recently published the novelty of a multiplication table by the name of "Lilavathi Multiplication Table" which has been so prepared as to make it realistic and useful to children who get it by heart.

We request you to encourage us by introducing these books in the schools under your control, so that it may be an incentive to us to bring out more books of this kind.

*We remain,*

*Sir,*

*Yours obediently,*

**T. K. SUBRAMANIAM & Son.**

---

P. S. Tamil Readers, Lilavathi modern arithmetic and Mahan VI are in the Press.

# OPINIONS.

---

K. S. RAMASWAMI SASTRI, *Sub Judge.*

TANJORE,
6—12—1925.

I have read through your series of book-lets called "மஹான்களின் சரிதங்கள்" (Lives of great men and women). They are a valuable series because they aim at holding up high ideals before the youth of India. The lives are narrated in a brief and telling way and the style is clear and concise and attractive. The books combine moral and religious instruction in an effective and unobtrusive way. I wish your venture every success.

(Sd). K. S. RAMASWAMI SASTRI.

---

KUMBAKONAM.
26—2—25.

"மஹான்களின் சரிதம்" Nos. 1, 2 & 3, I have seen through. The publishers have shown indeed nice discrimination and judgment both in the choice of matter and treatment. The youngsters for whom the books are intended are sure to profit by this study. The stories given are simple, interesting and instructive and the language employed is quite suitable I have no doubt that the books, excellent as they are, will be widely used.

TOWN HIGH SCHOOL, *Kumbakonam.* (Sd.) R. SWAMINATHA AYYER, *Head Master.*

---

KUMBAKONAM.
*16th March*, 1925.

I read with great pleasure the three little booklets sent to me by Messrs. T. K. Subramaniam & Son. They have been written in excellent style just suited for Elementary School children. Care has been taken in the choice of the subjects and each lesson conveys an excellent moral principle. I am sure that it will meet with the success which it deserves.

BANADURAI HIGH SCHOOL, *Kumbakonam.* (Sd.) T. R. Rengasami Iyengar, M. A., L. T., *Head Master*

I have read with great interest and pleasure the two volumes of "மஹான்களின் சரிதம்" published by Messrs. T. K. Subramaniam & Son, Kumbakonam for use in Elementary Schools. The work is in accordance with the recent syllabus issued by the Educational Officers of this district and has been carefully done. The matter, presentation, printing and binding are all good and the price is also moderate. Another good feature of the books is the appendix at the end containing songs suited to school children. These books are **just** what Elementary Schools require (I mean by this, the teachers & pupils) to infuse life and vigour into their work. I wish them all success and wide popularity.

TIRUVALUR. (Sd.) V. MUTHUSAMI AIYER, M. A., L. T.,
*Deputy Inspector of Schools,*
*Negapatam Range.*

---

I have carefully gone through "மஹான்களின் சரிதம்" series 1, 2 and 3. The aim of the publishers, as setforth in the preface, is to cultivate, in young boys and girls, definite principles of conduct and qualities of character which promote the welfare of the individual and the society. The stories, I dare say, are admirably fitted for the realisation of this aim, and are interestingly told in simple easy language. Most of the stories have been selected from the lives of great and good men and women and afford striking illustrations of truthfulness, honesty, courage. obedience, kindness, service and other qualities. The printing, and the get up are good and the prices moderate. The books deserve to be used by children for supplementary reading and are sure to command a wide popularity.

KUMBAKONAM, *March 2, 1925.* (Sd.) K. S. VAIDYANATHA AIYER, B.A., L.T.,
*Deputy Inspector of Schools,*
*Kumbakonam.*

---

# பொருளடக்கம்.


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| | கடவுள் வாழ்த்து | |
| 1. | திருஞானசம்பந்தர் ... | 1 |
| 2. | திருமங்கையாழ்வார் ... | 4 |
| 3. | மாணிக்கவாசகர் ... | 7 |
| 4. | சுந்தரேசுவரர் ... | 9 |
| 5. | ஔவையும், சுப்பிரமணியசுவாமியும் | 11 |
| 6. | ஏகலைவன் ... | 13 |
| 7. | அரிச்சந்திரன் ... | 15 |
| 8. | மார்க்கண்டேயன் ... | 19 |
| 9. | சாவித்திரி ... | 22 |
| 10. | ஏசுநாதர் ... | 26 |
| 11. | முஹம்மது நபி ... | 28 |
| 12. | மனுச்சோழன் ... | 31 |
| 13. | கரிகாற்சோழன் ... | 33 |
| 14. | தேசிங்குராஜன் ... | 34 |
| 15. | துருவன் ... | 37 |
| 16. | எட்வர்ட் சக்கரவர்த்தி ... | 39 |
| 17. | அலெக்ஸாண்டரும், கொள்ளைக்காரனும் (நாடகம்) ... | 42 |
| | செய்யுட் பாடம் ... | 50 |
| | ஸ்தோத்திரப்பாடல்கள் ... | 58 |

# கடவுள் வாழ்த்து.

## பெரிய புராணம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருவாசகம்.

வானாகி மண்ணாகி * வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!

## திருவருட்பா.

மாற்றறியாத செழும் பசும் பொன்னே!
மாணிக்கமே! சுடர் வண்ணக் கொழுந்தே!
† கூற்றறியாத பெருந் தவ ருள்ளக்
கோயிலிருந்த குணப் பெருங் குன்றே!
வேற்றறியாத சிற் றம்பலக் கனியே!
‡ விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே!
சாற்றறியாத என் சாற்றுங் களித்தாய்
தனிநடராஜ! என் சற்குரு மணியே.

## சரஸ்வதி

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோஜக மேழுமளித்(து)
உண்டா னுறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலா வல்லியே.

---

* வளி—காற்று. † கூற்று—யமன். ‡ விச்சை—வித்தை; இச்சை என்று படித்தல் பிழை.



எட்வர்ட் சக்கரவர்த்தி.

உ

கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

## மலர் 3.

## I. கதைப் பகுதி.

### 1. திருஞான சம்பந்தர்.

ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்குமுன் சீர்காழியில் சிவபாதஹிருதயர் என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவர் மகா சிவபக்தர். அவரது மனைவியின் பெயர் பகவதியார். இவர்கள் மணமாகி நெடுநாள்கள் வரையில் புத்திரனில்லாதிருந்தார்கள். இவர்கள் "தங்களுக்குப் புதல்வனைத்தந்தருள வேண்டும்" என்று கடவுளைப் பிரார்த்தித்து வந்தனர். ஈசனருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது தெய்வத்தன்மையுள்ள தாதலால் அதிரூபமுள்ளதாயிருந்தது.

ஒருநாள் சிவபாதஹிருதயர் அவ்வூர்க் கோயிலிலுள்ள திருக்குளத்திற்கு ஸ்நானஞ் செய்யப் புறப்பட்டார். அவரது மூன்று வயதுள்ள அருமைக் குழந்தையும் ஓடி வந்து அவரது காலைக் கட்டிக்கொண்டது. அவர் அதையும் அழைத்துக்கொண்டு சென்றார்; குழந்தையைக் குளக் கரையில் விட்டுவிட்டு ஸ்நானஞ் செய்தார். குழந்தை "அப்பா, அம்மா" என்று அழுதது. உடனே சுவாமியும் அம்மனும் அக் குளக் கரைக்கு வந்து, குழந்தைக்கு ஞானப்பாலை ஊட்டினர். தந்தை நீராடினதும் குழந்தையைப் பார்த்தார். அதன் வாயில் பால் வழிந்து கொண்டிருந்தது. அவர் "யார் உனக்குப் பால் ஊட்டினது" என்று குழந்தையைக் கேட்டார். அஃது ஆகாயத்தில் ரிஷபா ரூடராயிருந்த பரமசிவனையும் உமா தேவியையுங் காட்டிற்று. உடனே அக் குழந்தை

'தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடி பூசியென்னுள்ளம்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே'

என்று ஈசனைப் புகழ்ந்து பாடிற்று.

இவ் விஷயம் அந்த ஊரெல்லாம் பரவிற்று. குழந்தை ஞானசம்பந்தரும் மற்றும் அனேகரும் கோயிலுக்குள் சென்றார்கள். குழந்தை அங்கே பாடிக் கூத்தாடிற்று. பிறகு எல்லோரும் குழந்தை

யுடன் வீடுவந்து சேர்ந்தார்கள். திருஞானசம்பந்தருக்கு உபநயனமாகிச் சில நாள்களுக்கெல்லாம் அவர் தமது தந்தையாரிடம் அனுமதி பெற்றுப் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்றார். திருமயிலாப்பூருக்கும் சென்றார். அவ்வூரில் ஒரு வைசியர் இருந்தார். அவர் பெயர் சிவநேசர். அவருக்கு ஒரே பெண் உண்டு. அவர் ஞானசம்பந்தருக்கே தமது பெண்ணை விவாகம் செய்துகொடுக்கவேண்டும் என்றிருந்தார். ஒரு நாள் அப் பெண் விஷம் தீண்டி இறந்தாள். அந்த வைசியர் இறந்த மகளைக் கொளுத்திச் சாம்பலையும் எலும்பையும் ஒரு குடத்தில் வைத்திருந்தார். ஞானசம்பந்தர் வந்ததும் அக் குடத்தை அவரது முன்னால் வைத்து நடந்த விஷயங்களைச் சொன்னார். "தமது பெண்ணை உயிர்ப்பித்துத் தந்தருள வேண்டும்" என்று வேண்டினார். இவர் அக் குடத்தை அவ்வூர்ச் சுவாமி சந்நிதியில் வைத்து ஈசுவரனைக் குறித்துச் சில பாட்டுக்களைப் பாடினார். உடனே குடத்திலிருந்து பெண் தூங்கி எழுந்ததுபோல் வெளியே வந்தாள். சிவநேசர் தமது மகளை மணக்கும்படி ஞானசம்பந்தரை வேண்டிக் கொண்டார். அவர் மறுத்துவிட்டார். பிறகு அப் பெண் கன்னிகையாகவே இருந்தாள்.

இங்ஙனமாகச் சிலகாலஞ் சென்றபின், ஞானசம்பந்தர் சீர்காழியை அடைந்தார். இவரது

தந்தை இவருக்குத் திருநல்லூரில் கலியாணஞ் செய்து வைத்தார். இவர் விபூதி ருத்ராக்ஷதாரி யாய்த் தமது மனைவியுடனும், இன்னும் அநேக ருடனும் அவ்வூர்ச் சிவாலயத்திற்குச் சென்று பல பதிகங்களைப் பாடினார். உடனே ஒரு ஜோதி உண்டாயிற்று. எல்லோரும் சிவபதம் அடைந் தனர்.

ஆகையால் "கடவுளை நம்பினோர்
கைவிடப்படார்."

---

## 2. திருமங்கை யாழ்வார்.

---

சோழநாட்டிலே திருமங்கை என்ற பாகமுண்டு. அதில் திருக்குறையூர் என்ற பட்டணம் ஒன்றிருந்தது. அவ்வூரிலிருந்த சேனைத் தலைவருக்குத் திருமங்கை யாழ்வார் புத்திரராகப் பிறந்தார். இவரது இயற்கைப் பெயர் நீலன் என்பது. இவரது தந்தை இவருக்கு இளம்பிராயத்திலேயே யுத்தப் பயிற்சியைக் கற்பித்தார்.

சோழராஜன் ஆழ்வாரின் தந்தைக்குப் பிறகு இவருக்கே சேனாதிபதி உத்தியோகத்தைத் தந்தான். இவர் அநேக சத்துருக்களைத் தோற்கடித்தார். அதற்காகச் சோழராஜன் அவ்வூர்ச் சிற்றரசுரிமையை ஆழ்வாருக்கு அளித்தான். இவரும் நன்றாய் ஆண்டுவந்தார்.

இப்படி இருக்க, திருவெள்ளக் குளம் என்ற ஊரில் ஒரு பிராமணனிடம் மிகவும் அழகிற் சிறந்த தெய்வத்தன்மையுள்ள ஒரு பெண்ணிருந் தது. அவளை மணஞ் செய்து கொள்ள வேண்டு மென்று திருமங்கை யாழ்வார் முயற்சி செய்தார். அப் பெண் "இவர் விஷ்ணு பக்தராளுல் தான் விவாகஞ் செய்து கொள்வேன்" என்றுள். ஆழ் வாரும் அப்படியே விஷ்ணு பக்தராகி வைஷ்ண வர்களுக்கு அடிக்கடி போஜனங்கள் செய்வித் தார். இவரும் எப்பொழுதும் மகாவிஷ்ணுவைப் பூஜித்து வந்தார். அதளுல் இவருக்கு ஆழ்வார் என்ற பட்டம் கிடைத்தது. அப் பெண்ணும் இவரை மணஞ்செய்து கொண்டாள்.

இராஜாங்க திரவியமெல்லாம் ததியாராதனை களில் செலவழிக்கப்பட்டன. சோழராஜனுக்கு வழக்கம்போல் கப்பம் அனுப்பப்படவில்லை. அர சன் ஆழ்வாரிடமிருந்து கப்பப்பணத்தை வாங்கி வர வேவுகாரர்களை அனுப்பினுன். இவர் "நாளைக்கு நாளைக்கு" என்று அவர்களிடம் சொல் லிப் பொழுது போக்கிஞர். இதைக் கேள்வியுற்ற அரசன் ஒரு சேனையை அனுப்பிப் பணம் வாங்கி வரச்செய்ய, ஆழ்வார் அதை எதிர்த்துத் தோற் கடித்தார். பிறகு சோழன் இவரை வஞ்சகமாய்க் கோயிலுக்குள் சிறைப்படுத்தி விட்டான். ஆழ்வா ருக்குக் கடவுள் உணவை அளித்து வந்தார். கட

வுள் ஆழ்வாரது கனவில் வந்து "காஞ்சீபுரத்தில் பணந்தருகிறேன் என்று கூறி அழைத்துப்போ" என்றார்.

அப்படியே ஆழ்வார் அரசனுடைய பரிவாரங்களை அழைத்துக் கொண்டு காஞ்சீபுரம் சென்றார். அங்கு வேகவதி நதிக்கரையிலே தோண்டித் திரவியத்தைக் காண்பித்தார். பரிவார ஜனங்கள் பயந்து ஓடினார்கள். அத் திரவியத்தை ஆழ்வார் விஷ்ணு பக்தர்களுக்கே அளித்துவிட்டார். பிறகு ததியாராதனை முதலியவைகளுக்குத் திரவியமில்லாத போது பிரயாணிகளை வழிப்பறி செய்து செலவழித்தார்.

இதைக் கடவுள் சகிக்கவில்லை. பகவான் ஆழ்வாருக்கு நற்புத்தி போதித்து உபதேசம் செய்ய எண்ணினார்; ஆபரணங்கள் நிறைந்தவராய்ப் பிராமண வேஷந் தரித்தார்; தமது மனையாளுடன் ஆழ்வார் வழிப்பறி செய்து நிற்கும் இடஞ் சென்றார். ஆழ்வாரும் இவரைத் தடுத்துச் சகல ஆபரணங்களையும் வாங்கிக்கொண்டு மூட்டை கட்டினார். அம்மூட்டை பூமியிலிருந்து கிளம்பவில்லை. அஃது அப்படியே பூமியோடு ஒட்டிக்கொண்டது. தூக்க முடியவில்லை.

உடனே ஆழ்வார் தம்மால் வழிப்பறி செய்யப்பட்டவர்கள் கடவுளர் என்று உணர்ந்தார்; அவர்களை வணங்கினார். கடவுள் அவருக்கு

அஷ்டாக்ஷரத்தைச் செவியில் ஓதினூர். திருமங்கை யாழ்வார் ஞானுேபதேசம்பெற்று அநேக விஷ்ணு ஸ்தலங்களைத் தரிசித்தார். பல கிரந்தங்களை இயற்றினூர் ; அநேக கோபுரங்களையும் ஆலயங்களையும் கட்டுவித்தார் ; நாக பட்டினத்திலிருந்த ஒரு ஜைன தங்க விக்ரகத்தைக் களவாடிவிற்று ஒரு பெரிய விஷ்ணுவாலயத்தைக் கட்டுவித்தார். அப்பால் அவர் பரமபதம் அடைந்தார்.

---

## 3. மாணிக்க வாசகர்.

---

(நரியைப் பரியாக்கியது.)

பாண்டிய அரசர்கள் ஆண்டது பாண்டிய நாடு. அதற்கு இராஜதானி மதுரை. அவ்வூரில் தமிழ்ப் பாஷை மிக ஓங்கிச் சிறப்புற்றிருந்தது. தமிழ்ச் சங்கமும் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. அந் நாட்டில் அரிமர்த்தன பாண்டியன் ஆண்டு வரும் நாளில், அவனுக்குத் திருவாதவூரர் என்ற மந்திரி இருந்தார். இவர் மகா சிவபக்தர்.

ஒரு நாள் அரசன் கீழைச்சமுத்திரக் கரைக்குப்போய்க் குதிரைகளை வாங்கி வரும்படி திருவாதவூரரைச் சைனியத்துடன் அனுப்பினூன். இவர் காட்டின் மார்க்கமாய்க் கீழ்க்கரையை நோக்கிச்

செல்லுகையில் திருப்பெருந்துறையில் (ஆளுடையார் கோவில்) குருந்த மரத்தடியில் பகவான் சில சிஷ்ய கணங்களுடன் இருக்கக் கண்டார். திருவாதவூரர் அக் குருவைக் கண்டு பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கைகூப்பி நின்றார். பகவான் திருவாதவூரருக்கு ஞானதீக்ஷை செய்து உபதேசம் செய்தார். திருவாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்று பெயரிட்டார். பிறகு பகவான் மறைந்து விட்டார்.

மாணிக்கவாசகர் தாம் குதிரைகள் வாங்கக் கொண்டு வந்திருந்த திரவியத்தைக் கொண்டு ஒரு சிவாலயத்தைக் கட்டுவித்தார். அரசன் 'மாணிக்கவாசகர் குதிரைகளை வாங்காமல் பொருளெல்லாவற்றையும் சிவாலயத்தில் செலவழித்து விட்டார்' என்று கேள்வியுற்றான்; அவரைப் பிடித்து வரும்படி ஆக்ஞாபித்தான்; மாணிக்கவாசகரைக் "குதிரைகள் எங்கே" என்று கேட்டான். அவர் "நாளைக்குவரும், நாளைக்குவரும்" என்று சொல்லி வந்தார். அரசன் கோபங் கொண்டு அவரைச் சிறையில் அடைத்தான். மாணிக்கவாசகர் குதிரைகளுக்காகக் கடவுளை வேண்டினார். அவர் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி அரசனிடம் கொணர்ந்து கொடுத்தார். அரசனும் மாணிக்கவாசகரை விடுவித்து விட்டான்.

ஆனால் இரவில் குதிரைகளெல்லாம் மீண்டும்

நரிகளாகி விட்டன. அரசன் "மந்திரி ஏதோ மாயம் செய்கிறார்" என்று எண்ணினன் மீண்டும் மாணிக்கவாசகரைச் சித்திரவதை செய்யச் சொன்னான். இவர் இவ் வதையைத் தாங்க மாட்டாமல் கடவுளிடம் முறையிட்டார். பகவான் அரசனுக்குப் புத்தி போதிக்க வழிதேடினர்.

## 4. சுந்தரேசுவரர்.

(பிட்டுக்கு மண் சுமந்தது.)

முன் பாடத்தின் இறுதியில் சொல்லியபடி பகவான் சுந்தரேசுவரர் அரசனுக்குப் புத்தி வரும்படி ஒரு தந்திரத்தைச் செய்தார். அஃதென்னவென்றால், வைகையாறு கரைபுரண்டு வெள்ளம் வரும்படி செய்ததே. அரசன் அதை அடைக்க "வீட்டுக்கு ஓர் ஆள் தட்டுக்கூடை மண்வெட்டியுடன் வரவேண்டும்; இல்லாவிட்டால் தண்டிக்கப்படுவார்கள்" என்று பறை சாற்றுவித்தான். அரசனது ஆக்கினைப்படி எல்லாரும் வந்தனர். ஆனால் வந்தி என்னும் பிட்டு வியாபாரஞ் செய்யும் வாணிச்சி மட்டும் ஆளை அனுப்பவில்லை. அவள் மகா சிவபக்தை. அவளுக்கு யாரும் இல்லை. அவள் அரசனது ஆக்கினை என்னவாகுமோ என்று பயந்திருந்தாள். அப்பொழுது ஸ்ரீ சுந்தரேசுவரர் அவளது பயத்தை நீக்க ஓர் ஆள்

வேஷம் பூண்டு "கூலியாள் தேவையா கூலி யாள்" என்று தட்டு மண்வெட்டியுடன் கூவிக் கொண்டு சென்றார். வந்தி அந்த ஆளைக் கூப்பிட்டுத் "தனக்குப் பதிலாக வைகையாற்றிற்குக் கரை போடப் போகவேண்டும்" என்றாள். அந்தக் கூலியாளும் சம்மதிக்க, வந்தி கூலிக்குப் பதிலாகப் பிட்டுக் கொடுத்து அனுப்பினாள். அதை வாங்கித் தின்றுகொண்டு அந்தக் கூலியாளாக வந்த கடவுள் வந்தியையும் அழைத்துச் சென்றார். வந்தி தனக்குக் குறிப்பிட்ட இடத்தைக் காட்டினாள். ஆண்டவர் அவளை வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டுத் தமக்கு ஏற்பட்ட பாகத்தில் ஒரு தட்டு மண்ணைப் போடுவதும் ஆடுவதும் பாடுவதுமாயிருந்தார். அதைக் கண்ட சேவகர்கள் அந்த ஆளை அரசனிடம் கொண்டு போனார்கள். அவன் பிரம்பால் அந்த ஆளை அடித்தான். உடனே பிரமாதி தேவர்கள் முதல் எல்லோருடைய முதுகிலும் அந்த அடி விழுந்தது. அரிமர்த்தன பாண்டியன் முதுகிலும் விழுந்தது. அந்த ஆளாக வந்த கடவுள் ஒரு தட்டு மண்ணைப் போட்டுவிட்டு மறைந்தார்; வெள்ளமும் அடைபட்டது.

உடனே அசரீரி "ஏ பாண்டியா, நீ எமது பக்தன் மாணிக்கவாசகனைத் தொந்தரவு செய்ததற்காக நாம் இந்தத் தொந்தரையை உனக்குக் கொடுத்தோம். நீ அவனைப் பக்ஷமாய் நடத்து"

என்று சொல்லிற்று. அரசன் நடுநடுங்கி மாணிக்க வாசகரை விடுவித்தான்; அவரை உபசரித்தான்.

பிறகு மாணிக்கவாசகர் அரசனிடம் விடை பெற்றுச் சிவஸ்தலம்தோறும் சென்று கடவுளைத் துதித்துச் சோழநாடு சென்றார். அங்கு அவ் வரச னுடைய ஊமைப் பெண்ணைப் பேசும்படி செய் தார். பின்னர்ச் சிதம்பரஞ் சென்றார். அங்குக் கட வுளே ஒரு வேதியராக வந்து இவர் செய்த திரு வாசகத்தை எழுதினார். பிறகு ஒரு பெருஞ் ஜோதி உண்டாயிற்று. மாணிக்கவாசகர் அதில் கலந்து கொண்டார்.

---

## 5. ஔவையும், சுப்பிரமணிய சுவாமியும்.

(நாவற் பழம் பறித்து மண்ணிற் போட்டது.)

நமது தமிழ் நாட்டில் முற்காலத்தில் அனேக அற்புதங்கள் நடந்திருக்கின்றன. அவைகளில் இக் கதையுமொன்று. ஔவை, உப்பை, திருவள்ளுவர் முதலாயினோர் உடன் பிறந்தவர்கள். அவர்கள் தெய்வத்தன்மையுள்ள வர்கள். அவர்களின் தந்தையார் பெயர் பகவன். தாயின் பெயர் ஆதி. இவர்களுக்குப் பிறக்கும்

குழந்தைகளைப் பிறந்தவிடத்தே விட்டு விட்டுத் தாய் தந்தையர்கள் சென்றார்கள். அக் குழந்தைகள் தாமே ஆண்டவனருளால் வளர்ந்து வந்தன. ஔவையை 'அம்மையார்' என்று சாமான்யர் சொல்வது உண்டு. இவர் சந்தோஷம் வந்தால் கனகாபிஷேகஞ் செய்வார். கோபம் வந்தால் சபித்து விடுவார். அரசர்கள் கூட இவரிடம் பயப்படுவார்கள். இவர் அநேக நூல்களை இயற்றினார். இவரைச் சரஸ்வதியின் அவதாரமென்றுஞ் சொல்லுவார்கள்.

ஒரு நாள் ஔவையார் நன்றாய்ச் சுடும் வெயிலில் நடந்து செல்ல அவர்க்கு நா வறண்டது; தாகம் அதிகரித்தது. வழியில் இருந்த நாகமரத்தில் ஒரு பையனைக் கண்டார். ஔவையாருக்கு 'முருகக் கடவுளே பையனாகி மரத்திலிருக்கிறார்' என்பது தெரியாது. அவ் வாலிபனை நோக்கி "அப்பா, எனக்குத் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளச் சில நாவற் பழங்களைப் போடு" என்றார். பையன் "பாட்டி, சுடு நாவற்பழம் வேண்டுமோ? குளிர்ந்த நாவற்பழம் வேண்டுமோ?" என்று கேட்டான்.

ஔவையாருக்குக் கோபம் மூண்டது. ஆயினும் பையனை நோக்கிப் "பையா, நான் கிழவி; என்னிடம் என் பரிகாசஞ் செய்கிறாய்; தாகந் தீரக் குளிர்ந்த பழந்தான் வேண்டும்; அதையே போடு" என்றார். பையன் ஒரு கிளையைப் பிடித்துக்

குலுக்கினான். பழங்கள் உதிர்ந்தன. ஔவையார் கனிந்த பழங்களாகப் பொறுக்கினார்; ஒட்டியிருந்த மண் போக ஊதித் தின்றார். அப் பையன் கொக்கரித்தான்; "பாட்டி, பழம் சுடும்; வாய் வெந்து விடும்; ஊதி ஊதித் தின்று விடு" என்றான். ஔவை 'இச் சிறுவன் நம்மை ஏமாற்றிவிட்டானே. இதுவரையில் நமக்குச் சுடும்பழம் என்றால் கனிந்த பழமென்றும், குளிர்ந்த பழம் என்றால் காய் என்றும் தெரியவில்லையே. "முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்-கற்றன மென்று களியற்க" என்பது உண்மை' என எண்ணினார். பிறகு முருகக்கடவுள் ஔவையாருக்குத் தரிசனம் தந்து மறைந்தார்.

ஆதலால் பிள்ளைகளே, நீங்கள் முழுவதும் படித்து விட்டதாகக் கர்வம் அடையாதீர்கள்.

---

## 6. ஏகலைவன்.

---

முற்காலத்தில் ஹஸ்தினாபுரத்தில் திருதராஷ்டிரன் என்னும் மன்னவன் ஆண்டு வந்தான். அவனுக்கு நூறு குமாரர்கள். அவனது தம்பி பாண்டு. அவருக்கு ஐந்து குமாரர்கள். அவர்கள் தருமபுத்திரர், பீமசேனன், அர்ஜுனன், நகுலன், சகதேவன் எனப்படுவர். இவர்கள் நூற்றைந்து பேருக்கும் யுத்தப் பயிற்சி கற்பிக்கத்

துரோணர் என்ற பிராமணரை அரசன் நியமித்தான். துரோணருக்கு அர்ஜுனனிடம் பிரியம் அதிகம்.

அவ்வூரில் ஏகலைவன் என்றொரு வேடனிருந்தான். அவன் துரோணரை அடைந்து "தனக்கு வில் வித்தை கற்பித்தருள வேண்டும்" என்று மன்றாடினான். அவர் மறுத்து விட்டார். ஆயினும், அவன் மனந்தளராமல் வீடுசென்று துரோணரைப்போல் ஒரு சிலையைச் செய்தான்; அதற்குப் பிரதக்ஷண நமஸ்காரங்களைச் செய்தான்; குருவாகப் பாவித்தான்; அஸ்திரவித்தையைப் பழகிவந்தான். அவன் அச் சிலையிடம் வைத்திருந்த பக்தியால் மகா நுட்பமான வித்தைகளை எல்லாம் கற்றுவிட்டான்.

ஒரு நாள் துரோணருடன் பஞ்சபாண்டவர்கள் வேட்டைக்குச் செல்லுகையில் அர்ஜுனனுடைய நாய் ஏகலைவனது சிலம்பக் கூடத்திற்குச் சென்றது; அங்கிருந்த சிலையின் மேல் அசுத்தஞ் செய்தது. தனது குருவை இப்படிச் செய்ததைக் கண்ட ஏகலைவன் ஒரு பாணத்தை அந் நாயின் மேல் பிரயோகித்தான். அஃது அந் நாயின் உடல் முழுவதையும் துளைத்து விட்டது. தனது நாயின் துயரத்தைக் கண்ட அர்ஜுனன் 'தன்னைத் தவிர இந்த வித்தை வேறு ஒருவருக்கும் தெரியாதென்று த்ரோணர் சொல்லியிருக்கிறாரே. இவர் இன்னும்

யாருக்கோ கற்றுக்கொடுத்திருக்கிறார்' என்று எண்ணித் துரோணரைக் கேட்டான். அவரும் ஆச்சரியம் அடைந்து அச் சிலம்பக் கூடத்தில் நுழைந்து பார்த்தார்.

இவரைக் கண்டதும் ஏகலைவன் ஓடி வந்து, சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி உபசரித்தான். துரோணர் அவன் தனுர் வித்தை கற்ற விதத்தை அவனிடமிருந்து தெரிந்துகொண்டார். ஏகலைவன் " குரு தக்ஷிணையாக யாதுவேண்டும்?" என வேண்டினன். துரோணர் 'ஏகலைவன் அர்ஜுனனுக்கு ஒரு சமயம் போட்டியா யிருப்பான்' என்று எண்ணி, ஏகலைவனுடைய வலதுகைக் கட்டை விரலைத் தக்ஷிணையாகக் கேட்டார். அவனும் அப்படியே அறுத்துக் கொடுத்துவிட்டான். துரோணர் அவனது குருபக்தியைப் புகழ்ந்தார். கடவுளது அருளால் அவனுக்கு விரலும் முளைத்து விட்டது.

பிள்ளைகளே, நீங்கள் கடவுள், தாய், தந்தை, குரு, அரசன் இவர்களிடத்தில் பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

---

## 7. அரிச்சந்திரன்.

---

வெகு காலங்களுக்கு முன் அரிச்சந்திரன் என்னும் மன்னன் அயோத்திமா நகரில் ஆண்டு

வந்தான். இவன் சூரிய குலத்தைச் சேர்ந்தவன். இவன் மகா ஸத்யஸந்தன். இவனுக்குக் குரு வஸிஷ்டர். ஒருநாள் தேவலோகத்தில் வஸிஷ்டருக்கும், விசுவாமித்திரருக்கும் விவாத முண்டாயிற்று. வஸிஷ்டர் "அரிச்சந்திரன் ஸத்தியம் தவருதவன்" என்ருர். விசுவாமித்திரர் "நான் அரிச்சந்திரனை அஸத்தியனுக்குவேன்" என்ருர்.

விசுவாமித்திரர் ஒரு நாள் அரிச்சந்திரனிடம் வந்தார். தாம் யாகஞ் செய்யப்போவதாகவும், அதற்கு ஏராளமான திரவியம் வேண்டும் என்றும் கேட்டார். மன்னனும் உடனே தந்தான். ஆனுல் அம் முனிவர் தாம் வேண்டும்போது வாங்கிக்கொள்வதாய்ச் சொல்லிச் சென்ருர். பிறகு விசுவாமித்திரர் அவனது குணத்தைக் கெடுக்க வேறு சிலரை ஏவினுர். அரசன் "நாட்டைக் கொடுத்தாலும் கொடுத்துவிடுவேன்; எனது நற் செய்கையைவிட்டு விலகேன்" என்ருன். இதைக் கேட்டிருந்த விசுவாமித்திரர் "உனது நாட்டைக் கொடுக்கிறேன் என்ருயே; கொடு" என்ருர். அரிச்சந்திரனும் அப்படியே அவரிடம் தத்தம் செய்தான். முனிவர் தமது யாகத்துக்காகக் கொடுத்திருந்த தனத்தைக் கேட்டனர். அரிச்சந்திரன் காசிமாநகரில் போய்க் கொடுப்பதாய் வாக்களித்து விசுவாமித்திரரது தரகனையும் அழைத்துச்சென்ருன். அங்கே தனது மனைவி சந்திரமதி

யையும், குமாரன் தேவதாசனையும் ஒரு வேதியரிடம் விற்று முனிவருக்குப் பணத்தை அனுப்பினான். தரகன் "தனக்குத் தரகு கொடு" என்று கட்டாயப்படுத்தினான். தான் வீரபாகு என்னும் சுடுகாட்டுப் பறையனிடம் அடிமை புகுந்து அவனுக்கும் பணத்தைக் கொடுத்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் தேவதாசன் தருப்பை கொய்யப் போனபோது ஒரு கருநாகம் தீண்டி இறந்தான். இச் செய்தியைக் கேள்வியுற்ற சந்திரமதி புலம்பினாள்; புரண்டழுதாள்; காட்டிற்குள் சென்றாள்; சவத்தை யெடுத்துக் கொண்டு இருளில் மயானஞ் சென்றாள். சுடலை காத்திருந்த அரிச்சந்திரன் "கால் பணத்துக் காசும், முழத்துண்டும் இன்றித் தகனஞ்செய்யக் கூடாது" என்று சந்திரமதியிடஞ் சொல்ல, அவள் "ஐயோ தெய்வமே, நான் காசுக்கு எங்கே போவேன்!" என்று கதறினாள். அரிச்சந்திரன் "உனது கழுத்திலிருக்கும் பொன் தாலியை விற்றுக்கொடு" என்றான்.

அத் தாலி தெய்வீகமானது. அவள் பிறந்தது முதல் அஃது அவளது கழுத்தில் இருந்து வருவது. அஃது அரிச்சந்திரனைத் தவிர மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாது. சந்திரமதி "என் தெய்வத்தாலி இச் சுடலைகாக்கும் பறையனுக்குத் தெரியலாயிற்றே" என்று அலறினாள். உடனே

அவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொண்டு கதறினார்கள்.

அரிச்சந்திரன் சந்திரமதியை அவள் வேலை செய்யும் அந்தணரிடமிருந்து பணம் வாங்கிவர அனுப்பினான். அவள் செல்லும் வழியில் காசி அரசனுடைய சேவகர்கள் 'இராஜன் குழந்தையை இவள் கொன்றுவிட்டாள்' என்று பிடித்து அரசனிடம் அவளை இட்டுச்சென்றார்கள். சந்திரமதி "நானே பாவி" என்று ஒத்துக்கொண்டாள்.

அரசன் துக்கத்தாலும், கோபத்தாலும் சந்திரமதியைச் சிரச்சேதம் செய்யும்படி ஆக்ஞாபித்தான். சிரச்சேதம் செய்யவேண்டியதும் அரிச்சந்திரனுடைய வேலையாகவே முடிந்தது. அங்ஙனம் வெட்டக் கொண்டுபோகும் வழியில் விசுவாமித்திரர் எதிர்ப்பட்டார். "பணம் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை எனச் சொல்; எல்லாம் இனிது முடியும்" என்றார். உடனே அரிச்சந்திரன் கோபங் கொண்டான்; "கௌசிகரே,

*பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த*
*நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்*
*கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்"*

என்றான். அரிச்சந்திரன் வாளை ஓங்கிச் சந்திரமதியை வெட்ட அது மலர் மாலையாக மாறி விழுந்தது; உடனே ஈஸ்வரன் பிரத்யக்ஷமாகித் தேவதாசனையும், காசி அரசன் மகனையும் உயிர்ப்



மார்க்கண்டேயர்.

பித்தார்; அரிச்சந்திரனுக்கு நாடு, நகரங்கள் எல்லாவற்றையும் கொடுத்து மறைந்தார்.

பிள்ளைகளே, இவ்வரிச்சந்திரன் எவ்வளவு கஷ்டங்களைப் பட்டும் ஸத்தியத்தில் தவறவில்லை. நீங்களும் அப்படியே செய்தால் கடவுள் உங்களைக் காப்பார்.

## 8. மார்க்கண்டேயன்.

அனேக ஆண்டுகளுக்கு முன், காசிமாநகரத்திற்கு அருகில் கடகம் என்ற ஓர் ஊர் இருந்தது. அதில் மிருகண்டு என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவரது மனைவியாரின் பெயர் மருத்வதி. இவர்கள் சந்தோஷமாக இல்லறத்தை நடத்தி வந்தார்கள்.

ஒரு நாள் இவர்களது வீட்டிற்குச் சில ரிஷிகள் வந்தார்கள். மிருகண்டு வீட்டில் இல்லையாயினும், அவரது மனைவியார் அவர்களை நன்கு உபசரித்து அன்னமிட்டார். அவர்கள் அதைத் தொடுவதற்கு முன் "உமது கணவன் வெளியில் போயிருப்பதால், உமது புத்திரனையாவது கூட வைத்துக் கொண்டு உண்ண வேண்டும்; ஆதலால் அவனையாவது கூப்பிடும்" என்றார்கள்.

மருத்வதி "தங்களுக்குப் புத்திரபாக்கியம் உண்டாக இல்லையே" என்று உரைத்தனள்; ரிஷிகள் "சிவ சிவா; புத்திரனில்லாத அகத்தில் உண்ணலாகாது" என்று சொல்லி எழுந்துபோய் விட்டனர். மருத்வதி ரிஷிகள் உண்ணாது சென்றதைப்பற்றி வருந்தினாள்; தனது கணவன் வந்ததும் நடந்ததைக் கூறினாள்.

அன்று முதல் இருவரும் "தங்களுக்குச் சற்புத்திரனைத் தந்தருளவேண்டும்" என்று கடவுளைக் குறித்துத் தபஸ்புரிந்தார்கள். ஒரு நாள் இரவில் கடவுள் மிருகண்டுவின் முன்னே தோன்றி "உனக்குப் பதினாறு வயது மட்டும் இருக்கும் சற்புத்திரன் வேண்டுமா? அல்லது தீர்க்காயுள் உள்ள துஷ்ட புத்திரன் வேண்டுமா?" என்று வினவினர். மிருகண்டு "சற்புத்திரனே வேண்டும்" என்றார். கடவுளும் அப்படியே அனுக்கிரகித்தார்.

கடவுளுடைய கிருபையால் மிக ரூபலாவண்யமுள்ள ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு மார்க்கண்டேயர் என்று பெயரிட்டார்கள். அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. அக்ஷராப்பியாசம், உபநயனம் முதலிய நடந்தன. அச்சிறுவன் இளம் பிராயமுதல் கடவுளைப் பூஜித்துவந்தான்; தனது தந்தையிடமே வேதமோதினான்; எப்பொழுதும் பெரியவர்களை உபசரிப்பான். அவனுக்கு வயது

ஆக, ஆக அவனது அற்ப ஆயுளைப்பற்றி அவனது தாய் துக்கப் பட்டு வந்தாள். அதன் காரணத்தை மார்க்கண்டேயர் தமது தந்தையிடமிருந்து அறிந்து கொண்டார். அன்று முதல் அவர் காட்டிற்குச் சென்று, சிவலிங்கம் செய்து பூஜைபண்ணி வந்தார். சில காலம் செல்ல, ஒரு நாள் கடவுள் தம்மை அனுக்கிரகிப்பதாகக் கனவு கண்டார்.

அப்பால் தமது தந்தையிடம் விடைபெற்று ஸ்தலந்தோறும் சென்றார். அவரது பதினாறும் பிராயம் முடியுங் காலம் வரும்பொழுது சோழ நாட்டிலுள்ள* திருக்கடவூர் என்ற சிவஸ்தலத்தை அடைந்தார்; அங்கு அமிருத கடேசுவரரைப் பூஜை செய்து வந்தார். அவரது முடிவுநாளன்று பகவானைப் புஷ்பங்களால் அருச்சனை செய்து வரும் பொழுது, யமன் தன்னுடைய தூதர்களை ஏவி, மார்க்கண்டேயருடைய உயிரைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அவர்களால் இவரது அருகில்கூடச் செல்லமுடியவில்லை. ஆனதுபற்றி அவர்கள் யமனிடம் போய் "தங்களால் முடியவில்லை" என்பதைச் சொன்னார்கள். யமன் மிக்க கோபங்கொண்டு தனது எருமைக் கடாவின் மீது ஏறி ஆலயத்துக்குள் வந்தான். மார்க்கண்டேயரைக் கண்டு கூப்பிட்டான். அவர் வரவில்லை.

* இக் கதை காசிமா நகரத்தில் நடந்ததாகப் புராண வரலாறு.

தனது வாகனத்துடன் பாய்ந்து அவரைப் பிடிக்க முயன்ருன். அவர் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டார். யமன் தன்து பாசக்கயிற்ருல் லிங்கத்தையும் சேர்த்து இழுத்தான். உடனே லிங்கம் வெடித்தது. பரமசிவன் உக்கிரமாக வெளிவந்தார்; தமது சூலத்தால் யமனைக் குத்திக் கொன்ருர். அன்றுமுதல் மார்க்கண்டேயருக்கு "என்றும் பதிருைவயது" என்ற அனுக்கிரகத்தையும் செய்தார். பிறகு யமனையும் எழுப்பித் "தம்முடைய பக்தர்களை வதைக்க்கூடாது" என்று கட்டளையிட்டு அனுப்பினுர்.

பிள்ளைகளே, இக்கதையிலிருந்து கடவுளது கிருபை உண்டானுல் விதியையும் வெல்லலாம் என்பது தெரிகிறது.

---

## 9. சாவித்திரி.

---

இளைஞர்களே, நமது நாட்டின் வடபாகத்தில் மத்திர நாடு என்ற ஒரு நாடு இருந்தது. அதில் முன்ஞெரு காலத்தில் அசுவபதி என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஸரஸ்வதியின் கடாக்ஷத்தால் அதிரூப செளந்தரியமுள்ள ஒரு பெண் பிறந்தாள். அக்குழந்தைக்குச் சாவித்திரி என்று பெயரிட்டான். அவள் படிப்பிலும் மிகத் தேர்ச்சி அடைந்தாள். அவ



சாவித்திரி.

ளுக்குக் கன்னிப் பருவமும் வந்துவிட்டது. அவ ளது தந்தை அவளுக்குத் தக்க புருஷனைப் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. ஆதலால் தனது மகளை அழைத்து "உனது கணவனை உன் னிஷ்டப்படி தேடிக்கொள்" என்றான்.

தனது தந்தை சொல்லியபடி பரிவாரங்க ளோடு சாவித்திரி கணவனைத் தேடிச் சென்றாள். ஒரு காட்டில் சாலுவ தேசத்தரசன் நாட்டிலி ருந்து துரத்தப்பட்டு இரண்டு கண்ணுந் தெரி யாமல் ஒரு குடிசையிலிருந்தான். அவனுக்குச் சத்தியவான் என்ற ஒரு ஸத்புத்திரனிருந்தான். அவன் மகா குணசாலி. தன்னுடைய தாய் தந்தை யர்களுக்குச் சுச்ரூஷை செய்துவந்தான். சாவித் திரி அவனைக் கண்டதும் அவனையே 'தனக்கு உரிய கணவன்' என்று எண்ணிக் கொண்டு தந்தையிடஞ் சென்றாள். அங்கு நாரத மகாமுனி வரும் வந்திருந்தார். சாவித்திரி இருவருக்கும் நமஸ்காரஞ் செய்தாள். இருவரும் "தீர்க்க சுமங் கலியாயிரு" என்றார்கள். சாவித்திரி "சத்திய வானை மணப்பதாக நிச்சயித்து விட்டேன்" என் றாள். நாரதர் "அவன் அல்ப ஆயுள் உள்ளவ னுயிற்றே; இன்னும் ஒரு வருஷத்தில் இறப் பானே" என்றார். அசுவபதி "அப்படியானல் வேறு புருஷனைத் தேடுவாய்" என்றான். சாவித் திரி "கூடாது; அவரை மனத்தினல் நான் புரு

ஷன் என்று எண்ணிவிட்டேன்; இனி யாரையும் தேடேன்" என்றாள். நாரதர் "அவள் சொல்வது சரி; அவள் இஷ்டப்படியே செய்யட்டும்; மங் களம் உண்டாகுக" என்றார்.

நாரதரும் மறைந்து விட்டார். சாவித்திரி சத்தியவானை மணந்தாள். தனது கணவனைப் போலவே சாதாரண ஆடையை அணிந்து காட் டில் அக் குடிசையில் தன்னுடைய மாமன் மாமி களுக்கு மனங்கோணாமல் நடந்தாள். அவள் சுமங்கலியாகவேண்டி நோன்பு ஒன்றை அனுஷ் டித்து வந்தாள். அவள் எப்பொழுதும் கடவு ளையே தியானம் பண்ணி வந்தாள். சத்தியவா னுடைய ஆயுள் முடியுங்காலமும் நெருங்கிற்று.

சத்தியவான் இறந்து போக வேண்டிய தினத்தில் ஸமித்து வெட்டச் சென்றான் சாவித் திரியும் அனுமதி பெற்றுப் பின் தொடர்ந்தாள். கொஞ்சம் வெட்டியதும் சத்தியவான் "தலை வலிக் கிறது" என்று சாவித்திரியின் மடியில் சாய்ந்து கண்ணயர்ந்தான்.' சற்று நேரத்திற் கெல்லாம் யமன் வந்து பாசக்கயிற்றினால் சத்தியவானுடைய உயிரைக் கட்டிச் சென்றான். சாவித்திரி உத்தமி யாகையால் யமன் அவளது கண்ணுக்குப் புலப் பட்டான். அவனைப் பின்தொடர்ந்தாள். அவன் "சாவித்திரி, நீ உனது கணவனுயிரைத் தவிர எதையுங் கேள்; தருகிறேன்" என்றான். அவள்

"தனது மாமனருக்கு இரண்டு கண்களும் தெரிந்து ராஜ்யமும் கிடைக்கவேண்டும்" என்ருள். யமனும் "அப்படியே ஆகுக" என்ருன். இன்னமும் பின் தொடர்ந்தாள், யமன் "இன்னும் என்ன வேண்டும்?" என, "தனது தந்தைக்குச் சற்புத்திரர்கள் வேண்டும்" என்ருள். அவன் "அப்படியே தந்தேன்" என்ருன். சாவித்திரி விடாமல் இன்னும் பின் தொடர, யமன் "நீ இனி வராதே; போ" என்ருன். சாவித்திரி "இன்னும் ஒரு வரம் தந்தருள வேண்டும்" என, யமன் "கேள் தருகிறேன்" என்ருன். அவள் "தனக்கும், தனது புருஷனுக்கும் புத்திர பாக்கியம் உண்டாக வேண்டும்" என்ருள். யமன் யோஜியாமல் "அப்படியே தந்தேன்" என்ருன். சாவித்திரி யமனை நோக்கி "அப்படியானல் எனது கணவனுடைய உயிரை விடுங்கள்" என்ருள். யமன் தான் ஏமாந்து விட்டதை உணர்ந்து அவனது உயிரை விட்டுவிட்டான்.

சாவித்திரி ஓடி வந்து தனது கணவனுடைய தலையை முன்போல் மடியில் வைத்துக்கொண்டாள். சத்தியவான் தூங்கினவன் விழித்து எழுவது போல் எழுந்திருந்தான். இருவரும் குடிசைக்குச் செல்ல, அரசன் கண் தெரிந்து நடந்து கொண்டிருந்தான். யமன் வாக்களித்தபடி ராஜ்யமும் கிடைத்தது. அசுவபதிக்கும் புத்திரபாக்கிய

முண்டாயிற்று. எல்லாரும் சாவித்திரியின் புத்தியையும், யுக்தியையும் கண்டு புகழ்ந்தார்கள். அன்று முதல் சுமங்கலிகள் மாசியும் பங்குனியும் கூடுங் காலத்தில் காரடையான் நோன்பு என்ற ஒரு விரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஆகையால் ஸ்திரீகள் பதிவிரதா தருமத்தால் தாங்கள் எண்ணிய காரியத்தை நிறைவேற்றுவார்கள்.

## 10. ஏசுநாதர்.

பிள்ளைகளே, உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றனவாகப்பல மதங்கள் உண்டு. அவைகளுள் ஹிந்துமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமியமதம், பௌத்த மதம், ஜைன மதம் முதலியன நம்மால் பெரிதும் அறியப்படுவன. அவைகளில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்துப் பரவச் செய்தவர் ஏசுநாதர். இவர் பிறந்து 1925 ஆண்டுகளாகின்றன. இவர் மகாபுண்ணிய புருஷர். இவர் பிறந்த ஊர் பெதிலம் என்னும் சிறுகிராமம். இவரது தகப்பனாரின் பெயர் ஜோஸப். தாயின் பெயர் மேரி.

இவர் அவதரிப்பார் என்றும், யூதர் ஜாதி அரசனைக் கொன்று விடுவார் என்றும் வதந்திகள் உண்டாயின. அவ் வரசன் இவரைப் பிறந்தவுடன் கொன்றுவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்

தான். ஆதலால் இவரது அன்னை பெதிலம் என்னும் கிராமத்துக்கு ஓடிப்போய் அங்கே இவரைப் பெற்றெடுத்தார். இவர் பிறந்த செய்தியைக் கேட்ட அரசன் இவரைக் கொல்ல வழிதேடினன். ஏசுநாதர் எகிப்து நாட்டுக்கு ஓடினர்.

அக்காலத்தில் இவரது நாட்டாரெல்லாரும் மகா துஷ்டர்கள். ஒருவரையொருவர் அடித்து மாய்த்துக் கொள்வார்கள். பொய், களவு முதலியவை அவர்களுக்கு ஸகஜம். ஏசுநாதரோ மகா பரிசுத்தர். தமது நாட்டாருடைய வழக்கங்கள் இவருக்குப் பிடிக்கவில்லை. அவர்களை நல் வழிப் படுத்த வேண்டும் என்பதே இவரது நோக்கம். அதற்காகச் சமயம் பார்த்திருந்தார். யூத அரசனும் மாண்டான்.

பிறகு எகிப்திலிருந்து தமது நாட்டிற்கு வந்து ஞானஸ்நானம் செய்து கொண்டார். இவர் ஊரூராய்ச் சென்று தம்முடைய கொள்கைகளைப் போதித்தார். அவைகள் "பல தேவதைகளைத் தொழலாகாது; கடவுள் ஒருவரே; அவரை நித்தமும் வணங்கு; உன்னுடைய தாய் தந்தையரிடம் மரியாதையாயிரு; பிறர் உன்னை எப்படி நடத்த வேண்டும் என்று நீ எண்ணுகிருயோ அப்படியே நீயும் பிறரை நடத்த வேண்டும்; ஜீவஹிம்சை செய்யக் கூடாது; திருடக் கூடாது; பொய்ச்சாக்ஷி சொல்லக்கூடாது" என்பன. இவர்

போதிப்பதில் சிலருக்குச் சம்மதமில்லை. அவர்கள் இவரைப் பிடித்து அந்த நாட்டு அதிபதியிடம் கொடுத்து விட்டார்கள். அவன் இவரைச் சிலு வையில் அறைந்துவிட்டான். இவர் உயிர் நீங்கிய போது அவ்வூரில் அநேக அற்புதங்கள் நடந்தன.

மறுபடியும் இவர் தோன்றிக் காலையில் தம் முடைய சீஷர்களைக் கண்டு தம்முடைய உபதே சங்களைப் பரவச்செய்யச் சொல்லிவிட்டுப் பரலோ கம் அடைந்தார். ஐரோப்பியர்கள் கிறிஸ்தவ மதத்தினரே.

---

## 11. முஹம்மது நபி.

---

சிறுவர்களே, இவ்வுலகில் அனேக மதங்கள் பரவியிருக்கின்றன. அவைகளில் கிறிஸ்தவ மதத் தை ஏசுநாதர் உபதேசித்தார் என்பது உங்களுக் கும் தெரியும். பௌத்த மதத்தைப் புத்தரும், இஸ் லாமிய மதத்தை முஹம்மது நபியும் ஸ்தாபித் தார்கள்.

ஆசியா கண்டத்தில் அரேபியா என்பது ஒரு தேசம். அதில் பாலை வனங்கள் மிகுதி. அதற்கு முக்கியபட்டணம் மக்கா. அவ்வூரில் கி.பி. 570-ம் வருஷம் முகம்மது என்பவர் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் அபுதுல்லா; தாயா ரின் பெயர் அமீனு. இவர் பிறக்கும் முன்னரே

தந்தையார் இறந்துவிட்டார். இவரது ஐந்தாம் வயதில் இவரது தாயும் மரித்தார். தாய் தந்தை யற்ற இவர் இவரது சிற்றப்பன் வீட்டில் வளர்ந் தார். அவர் ஒரு வியாபாரி. அவருடன் முஹம் மதுவும் அயல்நாட்டுக்கு வியாபாரத்திற்காகச் செல்லுவார்.

இவரது பன்னிரண்டாவது வயதில் அவ் வூரிலிருந்த கதிஜா என்னும் ஒரு பணக்காரக் கைம்பெண்ணினிடம் காரியஸ்தராக அமர்ந்தார். அவர் சரக்குகளை அடிக்கடி ஒட்டகங்களின்மீது ஏற்றிக்கொண்டு அயல் தேசங்களுக்குச்சென்று சரக்குகளை விற்று வருவார். இவ்வாறு வியாபாரம் செய்து அந்த அம்மாளுக்கு விசேஷ லாபத்தைக் காட்டினார். கதிஜா இவரது யோக்கியத்தன்மை யையும், புத்தி நுட்பத்தையும் கண்டு இவரை மணக்க இச்சித்தார். முஹம்மதுவும் சம்மதித்தார். அப்பொழுது முஹம்மதுவுக்கு வயது இருபத் தைந்து. கதிஜாவுக்கு வயது உத்தேசம் நாற்பது.

முஹம்மது இளம்பிராய முதல் ஏகாந்தமாய் இருந்து கடவுளைத் தியானித்து வந்தார். விவாக மானதும் அவர் அடிக்கடி மக்காவுக்கு அருகிலி ருந்த ஒரு மலைக்குகைக்குள் சென்று ஏகாந்தமா யிருந்து கடவுளைத் தியானிப்பார். ஒருநாள் கன வில் “ நீ ஒரு புதிய மதத்தை ஸ்தாபிதம் செய்”

என்று இவரிடம் கடவுள் சொன்னதாகத் தெரிவித்தார்.

அன்றுமுதல் முஹம்மதுநபி இஸ்லாமிய மதக் கொள்கைகளைப் பிரசங்கம் செய்தார். அவை "கடவுள் ஒருவரே. அவர்தான் அல்லாஹ். அவருடைய தீர்க்கதரிசி நான்தான். இஸ்லாமியர்கள் எல்லோரும் சகோதரர்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்யலாகாது. இஸ்லாமியர்கள் மதுபானஞ் செய்யலாகாது. பன்றி இறைச்சியை உண்ணக்கூடாது. ஒவ்வொரு இஸ்லாமியனும் நான்கு மனைவிகளை மணக்கலாம். ஆனால் அவர்களும் இஸ்லாமிய மதத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும்" என்பன முதலிய.

இம் மதத்தை முதலில் தழுவியது இவரது மனைவியும், ஆலி என்பவனுந்தான். மக்காவிலுள்ளவர்கள் இவர் சொல்லியதை நம்பாமல் பரிகாசஞ்செய்தார்கள். இவரது சிற்றப்பன் இறந்தான். கதிஜாவும் இறந்தார். இவர்களுக்குப் பிறகு முஹம்மதுவுக்குப் பலம் குறைந்தது. ஜனங்கள் இவரை அடிக்கவும் வந்தார்கள்.

இவர் மக்காவிலுள்ளவர்களது தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் மதினாவுக்கு ஓடினார். அவ்விதம் சென்றதற்கு ஹிஜ்ரத் என்று பெயர். அதுமுதல் தான் ஹிஜ்ரி வருஷ ஆரம்பம். மதினாவிலுள்ளவர்கள் இவர் சொன்னதைக்கேட்டு

இஸ்லாமியர்களானார்கள். மதினாவில் இவர் ஒரு மசூதியைக் கட்டினார். மதினாவிலுள்ள இஸ்லாமியர்களை அழைத்துக்கொண்டு மக்காவின்மீது படையெடுத்து அவ்வூராரைத் தோற்கடித்தார்; அவ்வூரைக் கைப்பற்றினார்.

முஹம்மதுவுக்கு இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்களும் உண்டு. பிள்ளைகள் இளம் பிராயத்திலேயே மாண்டார்கள். கடைசிப்பெண்ணின் பெயர் பெட்டிமா என்பது. அவளை ஆலி மணந்தான். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். முஹம்மது பின்பு அனேக மனைவிகளை மணந்தார். இவர் கி. பி. 632-ல் பரலோகம் அடைந்தார். இவர் கைக்கொண்ட வேதத்திற்கு குர் ஆன் என்பது பெயர். இவர் பிறந்து வளர்ந்தது மக்கமா நகராகையால் இஸ்லாமியர்கள் இன்றைக்கும் அங்கு யாத்திரை போகிறார்கள்.

## 12. மனுச்சோழன்.

இளைஞர்காள், முன் காலங்களில் நமது ஜில்லாவைச் சோழர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலத்திலிருந்த நிலவரி, விளைச்சலில் ஆறிலொன்று தான். அவர்கள், வரியை ஆலயங்கள் கட்டுவதிலும், குளங்கள் ஏரிகள் ஆறுகள் வெட்டுவதிலும், கல்வி கைத்தொழில் வர்த்தகவிர்த்தி

முதலியபவைகளிலும் செலவிட்டார்கள்; ஆங்காங்கு நீதிஸ்தலங்களை ஏற்படுத்தினார்கள்; பஞ்சாயத்தார்களை நியமித்தார்கள். நியாய பரிபாலனம் பாரபக்ஷமின்றி நடந்துவந்தது.

இவர்களது இராஜதானி மாறிக்கொண்டேயிருந்தது. இவர்களில் செவ்வனே நியாயபரிபாலனம் செய்தவர்களில் மனுச்சோழன் என்பவனும் ஒருவன். இவனுடைய இராஜதானி திருவாரூர். இவன் தனது அரண்மனை வாயிலில் ஒரு மணியைக் கட்டியிருந்தான். அரசனிடம் குறைசொல்ல எண்ணுகிற யாரும் அம்மணியை அடித்தால் அரசன் அவரைக் கூப்பிட்டு விசாரணைசெய்து குறையைத் தீர்ப்பான்.

ஒருநாள் அரசனது அருமைப் புதல்வனை வீதிவிடங்கன் தனது தேரிலேறிக் கோவிலுக்குச் செல்லுகையில் தேர்க்காலில் ஒரு பசுவின் கன்றுக்குட்டி அகப்பட்டு இறந்தது. உடனே தாய்ப்பசு அரண்மனை வாயிலில் சென்று மணியை அடித்தது. அரசன் வெளியில் வந்து விசாரிக்க, தனது மகன் செய்த குற்றத்தைத் தெரிந்துகொண்டான். அமைச்சர்கள் நடு நடுங்கி, இளவரசனை மன்னிக்கும்படி அரசனை வேண்டினர். அவன் "நியாயந் தவறக்கூடாது" என்று எண்ணித் தனது மகனை அத்தேர்க்காலால் கொன்றுவிடுமாறு மந்திரியை ஏவினான். அதற்கு அவன் இணங்கவில்லை. ஆனால்

அமைச்சன் தற்கொலை புரிந்துகொண்டு இறந்தான். பிறகு அரசன் வீதிவிடங்கன்மேல் தேரைச் செலுத்தி இறக்கச்செய்தான். உடனே கடவுள் எல்லோருக்கும் தரிசனம் தந்தார்; இறந்த கன்றையும் இராஜகுமாரனையும் மந்திரியையும் உயிர்ப்பித்து மறைந்தார். நாட்டார் அரசனைப் புகழ்ந்தனர்.

"மன்னவர்க்கழகு செங்கோன் முறைமை."

## 13. கரிகாற் சோழன்.

மிகவும் கீர்த்திவாய்ந்த சோழ மன்னர்களில் இவரும் ஒருவர். இவரது தந்தை இவரது இளம் பிராயத்திலேயே மாண்டார். இவருக்குத் தக்கவயது வந்ததும் யுத்தத்தில் மகா கீர்த்தியடைந்தார். இவர் சேரர், பாண்டியர் இவர்களுடைய நாடுகளை ஜயித்தார். தக்ஷிணத்திலுள்ள ஸிம்மளத்தைக் கைப்பற்றினர். காவிரி, கொள்ளிடம் என்ற இவை பிரியுமிடத்தில் கல்லணையைக் கட்டுவித்தார். ஆறுகளுக் கெல்லாம் உடைப்பெடுக்காமல் கரைகளைப் போடுவித்தார்.

காவிரியின் முகத்துவாரத்தில் ஒரு பெரிய பட்டினத்தைக் கட்டினர். அது தான் காவிரிப்பூம் பட்டினம். அதையே தமது தலைமை நகரமாக்கிக் கொண்டார். வியாபாரத்திற்காகக் கப்பல்களைக்

கட்டினர். காவிரிப்பூம்பட்டினத்தில் அரண்மனை யைக் கட்டினர். நாடெங்கும் ரஸ்தாக்களைப் போடு வித்தார். ரஸ்தாக்களில் நிழல் தரும் மரங்களை வைத்தார். பிரயாணிகள் உண்ணச் சத்திரங்களை ஏற்படுத்தினர். நியாயஸ்தலங்கள் பலவற்றை ஏற் படுத்தினர். இவர் காலத்தில் நீர்ப் பாய்ச்சலுக் காகச் செய்த ஏற்பாடுகள் இன்றும் தஞ்சை ஜில்லா வில் உபயோகப்பட்டு வருகின்றன.

## 14. தேசிங்க ராஜன்.

சிறுவர்களே, நமது தஞ்சை ஜில்லாவின் வடக்கே தென்னார்க்காடு ஜில்லா இருக்கிறது. அதில் செஞ்சி என்ற ஓர் ஊரும், அவ்வூரில் ஒரு கோட்டையும் உண்டு. இஃது ஆர்க்காட்டு நவாப் புக்கு உட்பட்டது. சற்றேறக் குறைய முந்நூறு வருஷங்களுக்குமுன் இவ்வூரில் தேசிங்கன் என்ற மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். இவன் ஜய சிம்மன் என்றும் கூறப்படுவான். இவன் மஹா விஷ்ணுபக்தன். ஸ்ரீரங்கநாதரைத் தரிசனம் பண் ணுமல் உண்ணுன்; உறங்கான்.

இவன் இளம்பிராயமுதல் தாண்டல், குதித் தல், சிலம்பம் சுற்றல், குஸ்தி பழகுதல், குதிரை யேற்றம், யானை யேற்றம் முதலிய யுத்தப் பயிற்சி களைச் செய்து கைதேறியிருந்தான். இவன் மிகச்

சிறுவனு யிருக்கையில், டில்லி அரசனிடமிருந்த தெய்வ லோகத்துக் குதிரையிலேறி; அதைப் பரி சாகப் பெற்றிருந்தான். அதன் பெயர் "பாராச் சாரி" என்பது.

தேசிங்கமன்னன் பரம்பரையினர் ஆர்க்காட்டு நவாப்புக்கு வருடந்தோறும் கப்பங் கட்டவேண் டும். இவன் பட்டத்திற்கு வந்தது முதல் கப்பம் கட்டவேயில்லை. ஏனெனில், "சுத்த யுத்தவீரர்கள் பிறமன்னனுக்கு அரசிறை கட்டலாமா?" என் பான். இங்ஙனமிருக்க, ஆர்க்காட்டு நவாப்பு செஞ்சி அரசனிடமிருந்து கப்பப் பணம் வரா திருந்ததைத் தெரிந்து, தோன்றமல்லன் என்னும் வேவுகாரனைத் தேசிங்கனிடம் அனுப்பினுன்.

தோன்றமல்லன் தேசிங்கன் விஷ்ணுபக்தன் என்பதைத் தெரிந்தவனுதலால், சுண்ணும்பினுல் வெள்ளை நாமமும், யானை ரத்தத்தினுல் நடு நாம மும் போட்டுக்கொண்டு கோட்டையில் நுழைந் தான். தேசிங்கனிடம் நெருங்கிப் பணம்கேட்கவே, அவன் கோபம்கொண்டு,

"என்ன பேச்சுப் பேசினுயடா : தோன்றமல்லண்ணு,
நீ வந்தாற்போல் நவாப்பு வந்தால் நிமிஷமிருக்கமாட்டான்.
பணமென்ற சேதி காதில்கேட்டால் பாய்ந்து வெட்டிடுவேன்
நாளைக்குவரும் நவாப்பு சாயபை இன்றைக்கு வரச்சொல்லு
ரோஷக்காரனுனல் நவாப்பு சாயபை நொடியில் வரச்சொல்லு
ஆண்பிள்ளையானுல் நவாப்பு சாயபை அருகில் வரச்சொல்லு

மீசையுள்ளவனானால் நவாப்பு சாயபை விரைவில் வரச்சொல்லு
தைரியமுள்ளவனானால் நவாப்புசாயபை சல்தியில்வரச் சொல்லு
கத்திமுனையிலே காசுந்தாரேன் நவாப்புக்காரனாலும்,
பாசுமுனையிலே பணமுந்தாரேன் நவாப்புக்காரனாலும்,
போன வருஷத்துக் கிந்த வருஷம் வரகு விளைந்தது காண்
வரகு வைக்கோல் மெத்தக் கிடக்குது வாரிப்போகச் சொல்லு.
கோட்டைக்கு வெளியில் மணல் கிடக்குது கொண்டுபோகச்
[சொல்லு."

என்று கடுமையாக உரைத்தான்.

தோன்றமல்லனுக்குப் பயம் அதிகரித்தது. அவன் தேசிங்கனிடம் உத்தரவுபெற்று ஆர்க்காட்டிற்குப்போய் நவாப்பினிடம் நடந்ததைத் தெரிவித்தான். நவாப்புக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. அவன் தனக்குட்பட்ட சிற்றரசர்கள், பாளயக்காரர்கள் எல்லோரையும் பெருஞ் சேனையுடன் செஞ்சியை நெருங்கவிட்டான்.

தேசிங்கன் தனது நண்பன் மௌத்துக்காரனுக்குச் சொல்லி அனுப்ப, கலியாண மனையிலிருந்த மௌத்துக்காரனும் வந்து விட்டான். தேசிங்கன் தனது மனைவியிடம் சொல்லிவிட்டு ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்துக்குள் நுழைந்தான். கடவுள் யுத்தத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை நல்ல சகுனங்கள் ஆகவில்லை. ஒன்றையும் லட்சியம் செய்யாது தான் பராசாரியின் மீதும் தனது நண்பன் நீலவேணிக் குதிரையின் மீதுமாக ஏறிக் கை

யில் கத்தியுடன் யுத்த களத்தில் புகுந்தார்கள்; நவாப்பின் பாளயத்தைச் சின்னபின்னமாய் அடித்தார்கள். மௌத்துக்காரன் யுத்த களத்தில் இறந்தான். அச் செய்தியைக்கேட்டதும் தேசிங்கன் தனது வாளால் தன்னை மாய்த்துக் கொண்டான்.

இக் கதையினுல் "தைரியமுள்ளவர்கள் ஒருவருக்கும் தலைவணங்கார்கள்" என்பது தெரிகிறது.

## 15. துருவன்.

முன்ஞெரு காலத்தில் உத்தானபாதன் என்ஞெரு அரசனிருந்தான். அவனுக்கு ஸுநீதி, ஸுருசி என்று இரண்டு மனைவிகள் உண்டு. ஸுநீதியின் புத்திரன் துருவன். ஸுருசியின் புத்திரன் உத்தமன். அரசனுக்கு ஸுருசியினிடம் பிரியம் அதிகம். ஸுநீதி மிகவும் நல்லவள். ஒரு நாள் அரசன்மடியில்உத்தமன் விளையாடிக்கொண்டிருந்தான். ஸுருசியும் சமீபத்தில் நின்ருள். அப்போது துருவன் ஓடி வந்து, தனது தந்தையின் மடியில் உட்கார்ந்தான். உடனே ஸுருசி "துருவா, நீ ஸுநீதியின் மகன்; அரசனது மடியில் உட்காரத் தகுதியற்றவன். என் மகனுயின் நீயும்

உட்காரலாம். ஆதலால் நீ தபஸ்செய்து எனது வயிற்றில் பிறக்க வழிதேடு" என்ருள்.

துருவனுக்கு வயது ஐந்தாணுலும் அவனுடைய சிற்றன்னை சொன்னது அவனது மனத்தில் அம்பு பாய்ந்ததுபோல்தைத்தது. உடனே தனது தாயினிடம் சொன்ஞன். இதைக்கேட்ட ஸுநீதி "அவளும் உனக்குத் தாய்தான்; நீ கோபித்துக் கொள்ளாதே" என்ருள்.

துருவன் மனம் சகியாமல் "உத்தமனை விட மேலான பதவியை அடைவேன்." என்று சொல்லித் தாயினிடம் விடைபெற்றுக் காட்டிற்குச் சென்ருன்; வழியில் நாரதரைக் கண்டான்; அவரால் உபதேசிக்கப்பட்டான்; பிறகு காட்டில்ஓர் உன்னதமான இடத்தில் உட்கார்ந்து திருமாலைத் தியானிக்கத் தொடங்கிஞன். அவன் காட்டு மிருகங்களுக்காவது, பேய்களுக்காவது பயப்படவில்லை. கொஞ்ச காலமானதும் மஹாவிஷ்ணு அவனுக்குப் பிரத்தியக்ஷமாஞர். 'கடவுளை இன்னது கேட்கிறது' என்பது அவனுக்கு விளங்கவில்லை. கடவுள் அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தார். அவன் பகவானை வணங்கிப் பிரார்த்தித்தான். கடவுள் "நீ சிலகாலம் அரசாண்டு பிறகு அழியாப் பதவியை அடைவாய்" என்ருர்.

துருவனைக் கண்ட நாரதர் அரசனைக் கண்டித்துச் சென்ருர். துருவனை மீண்டும் ஊருக்கு

அழைத்து வந்தனர். அரசனும், அவனுடைய மனைவிமார்களும் அன்போடு அவனை வரவேற்றார்கள். தக்க வயது வந்ததும் துருவனுக்குப்பட்டம் கட்டப்பட்டது. துருவன் நெடுநாள் நன்றாய் அரசாண்டான். பிறகு கடவுள் அவனை என்றைக்கும் அழியாதபடி ஆகாயத்தில் துருவப்பட்டங் கட்டி நக்ஷத்திரமாகப் பிரகாசிக்கும்படி செய்தார். அவன் இன்றைக்கும் துருவநக்ஷத்திரமாக இருக்கிறான். ஈசனது அனுக்கிரகம் உண்டானால் எதையும் அடையலாம்.

"முயற்சி திருவினையாக்கும்."

## 16. எட்வர்ட் சக்கரவர்த்தி.

இளைஞர்காள், நீங்கள் "மஹான்களின் சரிதம்" இரண்டாவது மலரில் விக்டோரியா மஹாராணியாரைப்பற்றிப் படித்திருக்கிறீர்கள். இப்பொழுது அவரது மூத்த குமாரராகிய ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியாரைப்பற்றிக் கூறுவோம். இவர் 1841-ம் வருஷம் நவம்பர் மாதம் இவ்வுலகில் பிறந்தார். இளம்பிராயமுதல் இவரது பிதா ஆல்பர்ட் என்பவர் இவரது கல்வியையும், ஒழுக்கங்களையும் நன்றாய்க் கவனித்துவந்தார். இவருக்குத் தமது தாய் தந்தையரிடத்தில் அன்பும் பக்தி இவர் மிகவும் நற்குணம் வாய்ந்தவர். இவர் தமது 21-

வது வயதில் அலெக்ஸாண்டரா என்னும் ராஜ கன்னிகையை மணந்தார்.

இவர் வேல்ஸ் இளவரசராயிருக்கும் போதே தமது ராஜ்யம் முழுவதும் சுற்றியிருக்கிறார்; ஆங்காங்குள்ள விஷயங்களைச் செவ்வனே அறிந்து கொண்டார். இவர் மஹா புத்திமான்; காரியங்களை நன்றாய் அறிந்தவர்; ஆனால் கபடற்றவர். இவருக்கு ஏழைகளிடத்தில் பிரியம் அதிகம். இவர் அரசியல் சம்பந்தமான விஷயங்களில் தமது தாயார் உள்ளளவும் தலையிட்டுக்கொண்டதே யில்லை. இவர் 1875-ம் வருஷம் நமது இந்தியா நாட்டுக்கு விஜயம் செய்தார். அவர் இங்கு வந்து விட்டுத் தமது ஜன்மபூமிக்குப் போனதினால் தாமுள்ளளவும் இந்தியர்களையும், அவர்களுடைய கஷ்டங்களையும் மறவாது உதவி புரிந்து வந்தார்.

இவர் 1901-ம் வருஷம் சிம்மாஸனத்தில் ஏறினார். 1902-ம் வருஷம் இவருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. ஆனால் 1903-ம் வருஷந்தான் டில்லியில் தர்பார் நடந்தது. இவர் சிம்மாஸனம் ஏறினதும் " தமது தாயைப்போலவே இந்தியர்களைப் பாதுகாத்து வருவதாகவும், ஜாதி மதபேதமில்லாமலும் பாரபக்ஷமில்லாமலும் ராஜ்ய பரிபாலனம் செய்வதாகவும் வாக்களித்தார்.

இவர் பட்டத்துக்கு வந்தகாலத்தில் தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயர்களுக்கும், போயர்க

ளுக்கும் நடந்துவந்த யுத்தம் முடிவு பெறவில்லை. ஆகையால் அதை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானஞ் செய்யவேண்டுமென்று மிகவும் பாடு பட்டார். ஐரோப்பாவில் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் சண்டை உண்டாகாதபடி ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்தினர். இதனல் "அமைதியை உண்டாக்கு பவர்" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். இவர் அப்படிச் செய்திராவிட்டால் 1914-ம் ஆண்டு நடந்த யுத்தம் இவர் காலத்திலேயே நடந்திருக்க வேண்டும்.

இவர் பட்டத்துக்கு வந்ததுமுதல் தமது ஜன்ம பூமிக்காகவும், தமது விசாலமான ராஜ்யத் துக்காகவும், ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பிற நாடுகளுக்காகவும் இடைவிடாது உழைத்ததனல் தேக அசௌக்கியம் அடைந்தார். இவர் நெடுநாள் ஆளக் கொடுத்துவைக்கவில்லை. தம்முடைய பிரஜைகளும், அன்னிய நாட்டார்களும் மிகவும் வருந்த 1910-ம் வருஷம் மேமீ 6உ திடீரென இறைவனடி சேர்ந்தார். பின்னர் இவரது குமாரர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டப்பட்டார்.

# 17. அலெக்ஸாண்டரும், கொள்ளைக்காரனும்.

## I

இடம் :—அரண்மனையில் கொலுமண்டபம்.

காலம்:—காலை ஒன்பது மணி.

பாத்திரங்கள் :—அலெக்ஸாண்டர், மந்திரிமார் முதலாயினோர்.

அலெக்ஸாண்டர் :— மந்திரித் தலைவரே, நமது நாட்டிலே குடிகள் அனைவரும் இன்புற்று வாழ்ந்து வருகின்றனரா? குறைகள் வாரா வண்ணம் காக்கப்படுகின்றனரா? தத்தம் தொழில்களைச் செவ்வனே செய்து வரத்தக்க வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுகின்றனவா?

மந்திரி:—மகாராஜரே, கடவுளது திருவருளாலும், தங்களது பராக்கிரமச் செயல்களாலும் நம்முடைய குடிகள் இனிது வாழ்ந்து வருகின்றனர். நமது சிறந்த காவல் தலைவரது தலைமையின் கீழ்ச் செவ்வனே குறைவின்றிக் காக்கப்படுகின்றனர். புதியதாக நியமனம் பண்ணப்பட்ட தொழில் இலாகாத் தலைவர் தமது முதிர்ந்த அநுபவத்தால் பல நல்ல தொழிற் சாலைகளை வைத்து நடத்தி வருகிறார். தனிமையில் நடத்துவோர்க்குப் போதிய உதவிகளையும் செய்து வருகின்றார். அங்ஙனமே

இன்றியமையாத கல்வியும் ஒவ்வொருவருக்கும் இலவசமாகக்கற்பிக்கப்பட்டு வருகிறது. சுருக்கமாகச்சொன்னால் தங்களது உலகஅநுபவம் அனைத்தும் ஓர் உருக்கொண்டு நம்முடைய குடிகளைப் பல துறைகளிலும் முன்னேற்றி இன்புறச் செய்து வருகின்றன என்பது புகழ்ச்சியுரை ஆகாது; உண்மையே ஆகும்.

[சபையோர்களும், ஏனைய மந்திரி சபையினரும் முதன்மந்திரி கூறிய வற்றை ஆமோதிப்பவர் போலக் கைகொட்டி மகிழ்ச்சிக் குறியைத் தெரிவிக்கின்றார்கள். அரசனும் சிறிது புன்சிரிப்புடன் அகமகிழ்ந்து சபையோரைக் கவனிக்கிறான். சபை சிறிது பொழுது அரவம் இன்றி அமைதியாக இருக்கின்றது.]

(குடிகளிற் சிலர் ஒரு கூட்டமாக வருகின்றனர்.)

அரசர் :—மந்திரி, தாம் கூறியவற்றைக் கேட்கச் சிறிது உள்ளம் பூரிக்கின்றது. ஓர் அரசன் தன்னுடைய குடிகளுக்குச் செய்துகொடுக்கவேண்டியன இன்னும் பல உள என்பதே எனது கருத்து. தம்மை ஒத்த மதிவல்லமை வாய்ந்த பெரியார் முதன் மந்திரியாகக் கிடைத்திருப்பதும் எனது நற்காலக் குறியே.

[மந்திரியார் தலைவணங்கி நிற்கிறார்.]

# II

அரசர்:—(மந்திரியைப் பார்த்து.) நமது சபையை நோக்கிப் பலர் கூட்டமாக வருகின்றனரே; காரணம் யாதாக இருக்கலாம்?

மந்திரி:—அரசே, ஏதோ சொல்லிக் கொள்ள வருகிறவர்கள் போலவே காணப்படுகிறார்கள். கேட்போம்.

குடிகள்:— (எல்லோரும் ஒரே காலத்தில் பூமியில் விழுந்து வணங்கி, எழுந்து நின்று கண்ணீரும் கம்பலையுமாகத் துக்கக் குறியுடன் அரசனை நோக்கி) மகாராஜாவே, இது வரையிலே நாங்கள் சிறிதும் கவலையின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தோம். இனித் தாங்க மாட்டோம். நாட்டைவிட்டு ஓடிப் போகிறோம்.

அரசர் :— (படப்படப்பை மாற்றிக்கொண்டு) ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். நடந்தது யாது?

முதலாமவன் :—அரசே, நேற்று இரவு எங்களுக்கு நேர்ந்த சம்பவத்தைத் தெரிவிக்க வந்தோம்.

இரண்டாமவன் :—என்னுடைய குடும்பமே அழிந்து விட்டது. (மேலேசொல்ல இயலாமல் நிற்கிறான்.)

மூன்றாமவன் :—ஒரு கொள்ளைக்காரரது கூட்டம் எங்களை அலங்கோலம் பண்ணிவிட்டது. (அனைவரும் மீட்டும் கீழே விழுந்து கதறுகின்றனர்.)

மந்திரி :— (சேவகர்களைப் பார்த்து) இவர்களை அழைத்துப்போய் உணவு முதலிய கொடுத்து

வேண்டிய உபசாரங்களைச் செய்து சமாதானம் பண்ணுங்கள். (குடிகளைப் பார்த்து) நீங்கள் இந்தச் சிறிய விஷயத்திற்கு இவ்வளவு தூரம் அஞ்ச வேண்டாம். உங்களுடைய குறைகள் மிக விரைவில் நீக்கப்படும்.

(எல்லோரையும் சேவகர்கள் அழைத்துப் போகிறார்கள்.)

அரசர்:—(கோபத்துடன்) மந்திரி, சற்று முன்னர்தானே நீங்கள் நமது ஆட்சியைப் பிரமாதமாகப் புகழ்ந்தீர்கள். புகழ்ந்த வாய் மூடுமுன் பழிச்சொல் கேட்கப்படுகின்றதே. இஃதென்ன விபரீதம்!

“ மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தான் அதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனம்மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர்தமமால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம்காப்பான் அல்லனோ?”

மந்திரி:—ஆம்! அரசே, அதில் ஏதும் ஐயம் இல்லை. தங்களது ஆட்சியும் அம் முறையேதான் நடந்து வருகின்றது. சற்றுமுன் நான் புகழ்ந்து கூறியது வீண் அன்று.

அரசர்:—மந்திரீ, அஃது எங்ஙனம்? இதோ குறை கூறப்படுகிறதே.

மந்திரி:—ஆம்! உண்மைதான். அரசே, ஆயினும் அவ்வாறு நம்முடைய குடிகளுக்குத் தீங்கு செய்த கூட்டத்தினரும், அவர்களது தலைவனும் நமது காவல் தலைவரது சமர்த்தினால் பிடிக்கப்பட்

டுச் சிறையில் இருக்கின்றனராம். துன்புற்ற குடிகள் மகிழ்வுற வேண்டி எல்லாம் செய்து கொடுக்கப்பட்டனவாம். நாம் பேசிக்கொண் டிருக்கையில் வந்த இரண்டு கடிதங்கள் அவற்றைத் தெரிவிக்கின்றன. இவையே அக் கடிதங்கள்.

அரசர்:—(பெரு மகிழ்வுற்று) மந்திரீ, உமது நிர்வாகத்திறம் மெச்சத் தக்கது. அன்புள்ள அரசனுக்குக் குடிகள் படும் துன்பம் துன்பத்தைக் கொடுக்குமல்லவா? நல்லது. இனிமேலே செய்யக் கூடியது யாது?

மந்திரி:—அரசே, அந்தக் கள்வர் தலைவனைத் தங்கள் முன்னாகவே விசாரணை செய்து தண்டிக்க வேண்டியதுதான்.

அரசர்:—ஆம்! அதுவே சரி. இப்பொழுதே அவனை அழைத்து வருதல் நலமல்லவா?

மந்திரி:—('அப்படியே' என்று கூறிக் காவலர் தலைவரை நோக்குகிறார். சில காவலர்கள் சென்று கைதியாக்கப்பட் டிருக்கும் ராபர்ட் என்னும் கொள்ளைக்காரர் தலைவனை அழைத்துக் கொண்டு வருகிறார்கள்.)

## III

மந்திரி:—(கள்வர் தலைவனைப் பார்த்து) நீ யாவன்? யாது காரணம்பற்றி எம்முடைய குடிமக்களைத் துன்புறுத்துகின்றாய்?

கள்வர் தலைவன்:—மந்திரீ, என்னைக் கேட்கும் தகுதி அரசருக்கே உண்டு. அவர் கேட்பின் நான் பதில் அளிக்கமுடியும்.

மந்திரி:—அப்படியா. அது நியாயமற்றதாயிற்றே.

க-த:—இல்லை; இல்லை. நானும் ஒரு தலைவன். அரசரும் தலைவர். ஆதலின் அது நியாயமானதே.

அரசர்:—ஐயா, கள்வர் தலைவரே, மந்திரியார் உம்மைக் கேட்கவேண்டாம். நானே கேட்கின்றேன்.

க-த:—அரசே, சந்தோஷமாக விடை தருவேன்.

அரசர்:—ஐயா, 'பொல்லாத கொள்ளைக்காரன்' என்று ஜனங்களால் சொல்லப்படும் 'ராபர்ட்' என்பவரா தாம்?

க-த:—அரசே, எனது பெயர் 'ராபர்ட்' என்பதுதான். நான் பொல்லாத கொள்ளைக்காரன் ஆகமாட்டேன்; ஒரு போர்வீரனே ஆவேன்.

அரசர்:—ராபர்ட், என்ன! போர்வீரனு? வழிப்பறிசெய்வோன், கொலை செய்பவன், ஊரை அழிப்பவன்—இத்தகையினன் எவ்வாறு போர் வீரன் ஆவது? இவையே உனது தொழிலாயின் உன்னைத் தண்டிப்பது எனது கடமையே.

க-த:—இறைவ, இவை என்னிடத்தில் இருக்கலாம். என்றாலும், நீர் எப்படி என்னைத் தண்டிப்பது? நான் ஒரு கைதி என்ற முறையில் இதைவிட அதிகமாகக் கூறவிரும்பவில்லை.

அரசர்:—ராபர்ட், அப்படியா? அங்ஙனமாயின் நீ கைதியில்லை; அனைத்தையும் அஞ்சாமற் சொல்.

[அரசன் காவலரைப் பார்க்கிருன்; காவலர் ராபர்ட்டின் விலங்குகளை அவிழ்க்க அவனும் ஓர் ஆசனத்தில் அமர்கிருன்.]

க-த:—அரசே, தங்களது பெருந்தன்மைக்கு வந்தனம். தாங்களும் என்னிடத்திலே சாட்டப்படுகிற குற்றங்கள் அனைத்தையும் செய்திருக்கிறீர்கள்.

அரசர்:—ராபர்ட், எப்படி? நீ கூறுவது விளங்கவில்லை. விளக்கமாய்ச் சொல்.

க-த:—அரசே, 'தங்களது வெற்றி' என்று சொல்லப்படுவன எல்லாம் பல கொள்ளைகள், பல கொலைகள், பல ஊர் நாசம் இவற்ருல் நிரம்பினவே.

அரசர்:—ராபர்ட், ஆம். ஆனல் நான் மீட்டும் அக்குறைகளை நிவர்த்தி பண்ணி யிருக்கிறேன். எண்ணிறந்த நன்மைகளைச் செய்திருக்கிறேன். நீ இன்று பிடிபட்டு வந்திருப்பதே போதிய சான்று பகரும்.

க-த:—அரசே, நானும் பல ஏழைகளுக்கு உதவி யிருக்கிறேன். என்னை அண்டினவர்களைக் காத்து வருகிறேன்.

அரசர்:—(புன்னகை செய்து) ராபர்ட், உனது புத்திக் கூர்மையையும், உடல் வன்மையையும் ஒருவரம்புக்குட்ட வழியில் செலவழித்தால் பெரும் பயனைத் தருமே. நீ செய்வன குற்றமானவை என்பதை உணரவில்லையா?

க-த:—அரசே, அதிகம் கூறுவானேன். நம் இருவருடைய செயல்களும் குற்றம் நிரம்பியவையே. இதிற் சிறிதும் ஐயமின்று.

அரசர்:—ராபர்ட், நானும் குற்றவாளியா? உனது வியாக்கியானத்தின்படி சரிதான் போலிருக்கிறது.

க-த:—அரசே, எனது மனத்திலே தோன்றியதை ஒளிக்காமற் சொன்னேன். நம்மை ஆண்டவனே காத்தருளல் வேண்டும்.

[அலெக்ஸாண்டரது மனம் மாறுகின்றது. ராபர்ட்டும் தனது நிலைமையை உணருகின்றான்.]

அரசர்:—ராபர்ட், இன்று முதல் நீர் நமது சேனைத் தலைவருள் ஒருவரானீர்.

[அன்று முதல் ராபர்ட் தன்னுடைய கூட்டத்தினருடன் அரசனது சேனையில் அமர்ந்து இன்புற்றான்.]

## 2. செய்யுட் பாடம்.

### I

# வெற்றிவேற்கை.

(அதிவீரராமர்.)

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
2. கல்விக்கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமும்.
5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
6. வணிகர்க் கழகு வரும்பொரு ளீட்டல்.
7. உழவர்க் கழகே ருழுதூண் விரும்பல்.
8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
9. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
10. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.
11. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
12. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
13. தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
14. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

12-1025

15. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

16. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

17. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

18. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே

19. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

20. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

21. கற்கை நன்றே கற்கை நன்றே.

22. பிச்சை புகினும் கற்கை நன்றே.

23. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்.

24. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

25. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

26. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

27. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

28. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

29. வழியே ஏகுக வழியே மீளுக.

II

# நல்வழி.

(ஔவையார்.)

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். (1)

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. (2)

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற்—கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. (3)

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். (4)

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி ஞலென்
உடலோடு வாழு முயிர்க்கு. (5)

எல்லாப் படியாலு மெண்ணிஞ லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலிஞ லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. (6)

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாந்—தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம். (7)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. (8)

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டாம்
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். (9)

ஒருநா ளுணவை யொழியென்று லொழியாய்
இருநாளுக் கேலென்று லேலாய்—ஒருநாளும்
என்னே வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னேடு வாழ்த லரிது. (10)

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (11)

ஆவாரை யாரே அழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். (12)

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். (13)

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி. (14)

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறம்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். (15)

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். (16)

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். (17)

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான். (18)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். (19)

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. (20)

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. (21)

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. (22)

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல். (23)

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான். (24)

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். (25)

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பர்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி. (26)

இழுக்குடைய பாட்டிற் கிசை நன்று சால
ஒழுக்கம உயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி. (27)

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (28)

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். (29)

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன் வாயிற் சொல். (30)

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி. (31)

# 3 அனுபந்தம்.

# I. (a) ஸ்தோத்திரப் பாடல்கள்.

## விநாயகர்.

நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவோம்.

## சுப்பிரமணியர்.

நாதவிந்து கலாதி நமோநம, வேத மந்த்ர ஸ்வரூபா நமோநம,
ஞான பண்டித ஸ்வாமி நமோநம—வெகு கோடி
நாம சம்பு குமாரா நமோநம, போகஸுந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம—பர சூர
சேத தண்ட விநோதா நமோநம, கீதகிங்கிணிபாதா நமோநம,
தீர ஸம்ப்ரம வீரா நமோநம—கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோநம, தூய அம்பல லீலா நமோநம,
தேவ குஞ்சரி பாகா நமோநம—அருள்தாராய்;
ஈதலும் பல கோலால பூஜையும் ஓதலும்குண ஆசாரநீதியும்,
ஈரமுங் குரு ஸ்ரீபாத ஸேவையும்—மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரி யால்விளை சோழமண்டலமீதேமநோகர,
ராஜ கம்பிர நாடாளு நாயக வய லூர!
ஆதரப்பயி லாரூரர் தோழமை, சேர்தல் கொண்டவரோடே
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி—லையி லேகி [முன்னாளினில்

ஆதியந்த உலா ஆசு பாடிய, சேரர் கொங்குவை காவூர்நனடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள்—பெருமாளே !

## தேவாரம்.

பித்தா! பிறை சூடி! பெரு மானே! அருளாளா!
எத்தால் மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருள்
அத்தா! உனக் காளாய்இனி யல்லே னெனலாமே? [துறையுள்

## திருவாய்மொழி. (நீலாம்புரி ராகம்)

மன்னுபுகழ்க் கௌஸலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே[சேர்
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ.

---

# I. (b) தேசாபிமானப்பாடல்.

---

உலகிற் சிறந் தொளிர்வ தெங்கள் நாடே—பல
உண்மைகள் தோன்றிய தெங்கள் நாடே
தத்துவக் கலையுள்ள தும் எங்கள் நாடே—நல்ல
தாபதர் வதிந்ததும் எங்கள் நாடே
செந்தமிழ் வளர்வதும் எங்கள் நாடே—வெகு
சிவஸ்தல மன்னுவதும் எங்கள் நாடே
வைணவ ஸ்தலமுள்ள தும் எங்கள் நாடே—உயர்
வானவர் போற்றுவதும் எங்கள் நாடே
பங்கஜத் தடமுள்ள தெங்கள் நாடே—தமிழ்ச்
சங்கம் தழைத்ததும் எங்கள் நாடே

கங்கை பாவுவ தெங்கள் நாடே—திருக்
காவேரி சூழுவது மெங்கள் நாடே
சேரர்க ளாண்டதும் எங்கள் நாடே—நல்ல
சோழர்க ளாண்டதும் எங்கள் நாடே
காண்டற்கினியதும் எங்கள் நாடே—தமிழ்ப்
பாண்டியர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
வாணிகம் வளர்ந்ததும் எங்கள் நாடே—திரு
வள்ளுவர் பிறந்ததும் எங்கள் நாடே
கப்பல்கள் கட்டிய தெங்கள் நாடே—நீதிக்
காவியம் நிறைந்துள்ள தெங்கள் நாடே
கைத்தொழில் கண்டதும் எங்கள் நாடே—கொடைக்
காவலர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சிற்பஞ் சிறந்ததும் எங்கள் நாடே—தரும்
கற்பதரு வென்பதும் எங்கள் நாடே
பைம்பொன் விளைவதும் எங்கள் நாடே—அரும்
கம்பன் பிறந்ததும் எங்கள் நாடே
அருட்கிடமாவதும் எங்கள் நாடே—பெரும்
அடியவர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சித்தர்க ளுதித்ததும் எங்கள் நாடே—மிகச்
சிறந்த மருந்துள தெங்கள் நாடே
நெசவுத் தொழிலுடைய தெங்கள் நாடே—நல்ல
நேசம் விளைப்பதும் எங்கள் நாடே
உண்ணும் பொருளுடைய தெங்கள் நாடே—வீரக்
கண்ணகி தோன்றிய தெங்கள் நாடே
ஔவையார் வளர்ந்ததும் எங்கள் நாடே—சுய
அரசு பெறுவதும் எங்கள் நாடே
சாந்தம் பொருந்தியதும் எங்கள் நாடே—ஐந்தாம்

ஜார்ஜ் ஜரசாள்வதும் எங்கள் நாடே
தஞ்சைத் தலைநகர் எங்கள் நாடே—மகிழ்
தாண்டவ மாடுவதும் எங்கள் நாடே.

---

II. (b) இலக்கணம் :—பெயர்ச்சொல்; வினைச்சொல்.

III. செய்யுட்பாடம் :—(a) நல்வழி முழுதும். (வேறிடத்தில்)

(b) கோவிந்த சதகம்.

1. செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீங்குசெய் வாரைத் துரந்தா சாள இந்தப்
படிக்கொரு மன்னனுண்டானால் உழுது பயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண்டோ அச்சுதாநந்த கோவிந்தனே!

2. கட்டாண்மை வேந்தர் பெருமை பெண்ணுதவன் கண்ணர்
பட்டாலல்லாமல் வணங்கார்; விடமுள் படாமற்சும்மா [அடி
தொட்டா லதுபிள்ளைப்பூச்சி யென்பார்; முள்சுறுக்கெனவே
கொட்டாமற் றேளென்பரோ அச்சுதாநந்த கோவிந்தனே!

3. எடுத்தாலு மூறும்; இறைத்தாலும் மூறும்; இடை நடுவே
மடுத்தால் மறிபடுமோ மணற்கேணித் தண்ணீர்; அதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண்டானவர் அன்புடனே
கொடுத்தாற் குறைவருமோ அச்சுதாநந்த கோவிந்தனே!

---

(c) குமரேச சதகம்.

1. தவமது செய்தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த்தவ னொருபிதா
தயையாக வித்தையைச் சாற்றினே னொருபிதா
சார்ந்த சற்குரு வொரு பிதா

அவமறுத் தாள்கின்ற அரசொருபிதா நல்ல
ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென்றுற்ற துயர் தீர்த்துளோ ரொருபிதா
அன்புள முனோன் ஒரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ ரொருபிதா
கலி தவிர்த்தவ ரொரு பிதா
காசினியி லிவரை நித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதியாகும் ;
மவுலிதனில் மதியரவு புனைவிமலர் உதவுசிறு
மதலையெனவரு குருபரா !
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேசனே !

2. கடுகடுத்தாயிரம் செய்குவதில் இன்சொலால்
களிகொண் டழைத்தல்நன்று ;
கனவேள்வியாயிரஞ் செய்வதிற்பொய்யுரை
கருத்தொடு சொலாமைநன்று ;
வெடுவெடுக்கின்றதோர் அவிவேகியுறவினில்
விவேகியொடு பகைமைநன்று ;
வெகுமதிகளாயிரஞ் செய்வதில் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன்று ;
சடுதியிற் பக்குவம் சொல்லுங்கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்னல் நன்று ;
சம்பத்துடன் பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித்திரியம் நன்றுகாண் ;
மடுவினிற்கரியோல மென்னவந்தருள்செய்த
மான்மருமகனை முருகா !
மயிலேறி.................................குமரேசனே !

3. சடலமொன் றெடுத்தாற் புவிக்குநல்லவனென் று
தன்பேர் விளங்கவேண்டும்;
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானியென்றவ
தரிக்கவே வேண்டும்; அல்லால்,
திடமினியாணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டும்; அல்லால்,
* தேகியெனவருபவர்க் கில்லையென்னமலே
செய்யவேவேண்டும்; அல்லால்,
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவான்
ஆகவேவேண்டும்; அல்லால்,
அறிவான துரைமக்க ளாக வரவேண்டும்;—இவர்
அதிக பூபாலரையா!
வடகுவடு கிடுகிடென எழுகடலும் அலையெறிய
மணி † உரகன் முடிகள்நெரிய,
மயிலேறி......................................குமரேசனே!

---

## (d) திருவேங்கட சதகம்.

1. தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னச் சம்பாவாகுமோ?
சந்தத மும்வாடாதிருந்தாலும் எட்டிமலர்
ஜாதிமல்லிகை யாகுமோ?
கடலெலா நிறைவெள்ள மாயினுஞ்சுவைபெற்ற
காவிரியி னாற்றாகுமோ?
காகங்கள்கோலி தொனிசெய்தாலும் ஒருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ?

---

* தேகி—கொடு. † உரகன்—ஆதிசேஷன்.

படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழம் முந்திரிப்
பழமதற் கிணையாகுமோ?
பகர்கின்றஜாதியும் கனவயது மேன்மையும்
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிகமன்று; நற்குணமதிக மென்பர்காண்;
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவெங் கட ராயனே!

2. காட்டிலிண்டஞ் செடிதழைத்தென்ன, காஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன,
கரைநாணலெல்லா மலர்ந்தென்ன, காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன,
ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்ன, நீர்ப்பாசி
அது பச்சையாகிலென்ன
அற்பருக் கதிகாரம் வந்தென்ன, பேடிகையில்
ஆயுத மிருந்துமென்ன,
நீட்டமொடு காடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன,
நீதியறியாத மூடர்
நிறைசெல்வ ராயென்ன, ஞானமில்லாக் கல்வி
நிலைபோலிருக்கு மென்பார்;
வாட்டடங் கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்ணனே
மணவாள.........................ராயனே!

3. பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டாம்;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டாம்;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல் வேண்டாம்;

ஒருவருக் கிச்சையாய்ப் பொய் சொல்லிப் பின் சபையில்
ஊமைபோல் நிற்றல் வேண்டாம் ;
சற்றமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கவேண்டாம்,
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னினும்
தன்னையே புகழ்தல் வேண்டாம் ;
மற்றொன்று மெண்ணாது செய்யல்வேண் டாமென்பர் ;
மணவாள..................ராயனே.

## (e) I. வேதநாயகம் பிள்ளை ஸமரஸ கீர்த்தனை.

ராகம்-காபி-தாளம்-ரூபகம்.

(பல்லவி) நாளே நல்ல நாள்—புண்ணியஞ் செய்யும்—(நாளே)
(அநு) ஆளும் வேத நாயகன் தாளினை பூஜிக்கும்— (நாளே)
(சரணம்) 1. பாபமில் லாதகால க்ஷேபமும் ஸஜ்ஜனஸல்
லாபமு மேபர-லாபமாகக் கொள்ளும் (நாளே)
2. வேதமும் பெரியவர் போதமும் தேவஸங்—
கீதமும் முதலான நாதங்களுடன் செல்லும் (நாளே)
3. ஞானமும் ஜீவாபி மானமும் பரன்பதத்
தியானமு மேசெய்து மோன நிலையில் நிற்கும் (நாளே)
4. பத்தினி சுதர்குடும் பத்தவர் யாவரும்
சித்தநிர் மலத்துடன் பத்தி புரிந்திடும். (நாளே)
5. கூனர் குருடர் அங்க ஈனர் பிணியுடையோர்
தீனர் முதலியோர்க்குத் தானதருமம் செய்யும் (நாளே)

ராகம் இந்துஸ்தானம்-காபி-ஆதி தாளம்.

(பல்லவி) நித்தியானந்தத்தை நாடு—பர
நிர்மல சுகந்தேடு, மனமே! (நித்)
(அநுபல்) சத்திய மார்க்கந் தன்னிலே கூடு ;
சற்சன சங்கத்துடனுற வாடு (நித்)

(சரணம்) இந்திர ஜாலம் உலக வைபோகம் ;
இன்றைக் கிருப்பதுவோ சந்தேகம் ;
அந்தர மின்னல் போல் அழியும் தேகம் ;
ஐயோ அதனுடன் உனக்கேன் சிநேகம் (நித்)

தன தானிய முதலான சம்பத்து ;
சாசுவதமோ அதற்கு ஆயிரம் தத்து ;
தினமும் கவலை விளைத்திடும் வித்து ;
சீச்சீ ! அதனை விரும்பல் விபத்து. (நித்)

மெய்யே, ஒன்றுக்கும் உதவாப் பாண்டம் ;
மிருகாதிகள் சூழ் மாமிச பிண்டம்.
பொய்யோ இதற்கிங்கு நித்திய கண்டம்.
புண்ணியம் செய்யுனக் காயிரம் தண்டம் (நித்)

காண்பதெல்லாம் நிலையல்ல ; அநித்தியம் ;
காயம் இறந்திடவேண்டும் அகத்தியம் ;
வீண்பொருள் மீதுனக் கென்ன வைத்தியம் ;
வேத நாயகன் சொல்லே சத்தியம். (நித்)

IV. வாசகம் :—ஓர் அங்கீகாரமான வாசக புஸ்தகமும், மற்றொரு தகுந்த உப புஸ்தகமும்.

---

# கணிதப் பாடதிட்டம்.

---

## III. வகுப்பு.

10,000 வரையில் எண்மானம், எண் குறிப்பு.

25, 50, 100 ஆக முன் பின்னாக எண்ணுதல்.

13 முதல் 16 வரையில் வாய்பாடுகள். (வகுத்தலாகவும் பாவித்தல்.)

இரண்டு ஸ்தானம் வரையில் பெருக்கல், வகுத்தல் (விடை சரிபார்த்தல்.)

மத்தியில் '0' வருமிடத்தில் அதிக கவனம் செலுத்தல்.

ஓரினச் சூத்திரங்களும் லகுவான பலவினச் சூத்திரங்கள் நான்கும்.

பின்ன வாய்பாடு $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, $\frac{3}{16}$ கீழ்வாய் லக்கம் $\frac{3}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{4}$.

எண்சுவடி சம்பந்தமான கணக்கு; பெருக்கலும் வகுத்தலும்.

ஒற்றைவாய்க் கணக்கு, இரட்டைவாய்க் கணக்கு (i.e.) Simple and Compound fractions.

இந்தியநாணயம்:—இனமாற்றல், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்.

விவசாய சம்பந்தமான கணக்கு:—வாரம், குத்தகை, குழிவெட்டு, வேலிகட்டுதல் முதலியன.

வேலையும் கூலியும் :—கூலிக்கணக்குகளின் சுலபமான அப்பியாஸம்.

கால அளவை:—விநாடி, நாழிகை, ஹோரை (மணி) ஜாமம் (3 hrs.), நாள், வாரம், பக்ஷம், திதி, மாசம், ருது, அயனம், வருஷம், மண்டலம் (60 தமிழ் வருஷங்கள் பெயருடன்.)

இங்கிலீஷ் கால அளவை:—செகண்டு, நிமிஷம், மணி, நாள், வருஷம், மாதங்களின் நாட்கள்.

சூரியகதியைக் கொண்டும், கடிகாரத்தைக் கொண்டும் காலமறிதல். பஞ்சாங்கம் படிக்கப் பழகுதல்.

தண்ணீர் முறை சம்பந்தமாகவும், ரயில்பிரயாண சம்பந்தமாகவும் சுலபமான கால அளவுக் கணக்குகள்.

முகத்தலளவை:—ஆழாக்கு, சேர், படி, மரக்கால், குறுணி, பதக்கு, முக்குறுணி, கலம்; தயிர், நெய், பால், எண்ணெய்க் கணக்குகள்.

பண்ட மாற்றல்:—அரிசி, நெல் வியாபாரம்; அங்காடிக் கணக்கு.

பிளான் வரைதல்:—வகுப்பறை, தாழ்வாரம், பள்ளிக்கூடம், வீடு, கோயில், பிராகாரம்.

# பொது அறிவுப் பாடதிட்டம்.

## III. வகுப்பு.

1. கிராமப் பொதுக் காரியங்கள்:—குளம்—கோவில்—சந்தை—பள்ளிக்கூடம்—பஞ்சாயத்து—வாய்க்கால் வெட்டு—கிராம அபிமானம்—சுயநலம் பாராட்டா திருத்தல்.

2. கிராமத்தின் படம்:—தேச படத்திற்கும் சித்திர உருவத்திற்கும் உள்ள வித்தியாஸம்—படத்தில் இட அறிவு—தாலுகா ஜில்லா படங்களில் கிராமத்தின் இடம்—கூடிய வரையில்) அயல் நாட்டாருடைய வாழ்க்கை முறை—நாகரீகம்—பாஷை—இயற்கையமைப்பு—சீதோஷ்ண ஸ்திதி—அவர்களுக்கும் நமக்கும் நடையுடை பாவனைகளிலுள்ள வித்தியாஸங்கள். இவைகளைப்பற்றிய சிறு கதைகள். படங்களால் பிள்ளைகளின் கவனத்தைக் கவர்தல்.

3. ஸ்தல சரித்திரம்:—கர்ணபரம்பரைச் செய்தி—ஸ்தல புராணம்—கிராம ஆட்சி நடக்கும் விதம்—கிராமத்தலைவர்—கர்ணன்—இதர சிப்பந்திகள்—இவர்களின் அலுவல்.

4. கடிதத்தின் பிரயாணம்—சொற்பத் தபால் விஷயம்.

5. முன் வகுப்பில் சொல்லியபடி ஆகாயத்தை உற்று நோக்கி அறிதல்—சில நட்சத்திரங்களும் அவைகளின் இடமும்—ஆறு ருதுக்கள்—அமாவாசை—பௌர்ணமி—பன்னிரண்டு ராசிகள் (கூடுமானவரை)

6. காலரா—சிறிய அம்மை—பெரிய அம்மை. தக்க சிகிச்சை—நாட்டு வைத்தியமுறை—வருமுன் காக்கும் விதம்.

121025

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

உ

# மஹான்களின் சரிதம்.

(படங்களுடன்)

| | | | | |
|---|---|---|---|---|
| மஹான்களின் சரிதம் மலர் 1 | | 0 | 2 | 6 |
| மஹான்களின் சரிதம் மலர் 2 | | 0 | 3 | 0 |
| மஹான்களின் சரிதம் மலர் 3 | | 0 | 4 | 0 |
| மஹான்களின் சரிதம் மலர் 4 | | 0 | 5 | 0 |
| மஹான்களின் சரிதம் மலர் 5 | | 0 | 6 | 0 |
| மஹான்களின் சரிதம் மலர் 6 | | (அச்சில்) | | |
| லீலாவதி கணித வாய்பாடு | | 0 | 1 | 0 |
| லீலாவதி நூதன கணித புஸ்தகங்கள் | | (அச்சில்) | | |

## விளம்பரம்.

எங்களிடம் மேல் கண்டிருக்கும் எங்களுடைய சொந்தப் புஸ்தகங்களும், ஸ்கூல், காலேஜ் இவைகளுக்கு வேண்டிய இங்கிலீஷ், தமிழ், ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும், இங்கிலீஷ், தமிழ் நாவல்கள், பவுண்டன் பேனுக்கள், ஸோப்பு தினுசுகள், லெட்டர்பேபர், கவர்கள், கணக்குப் புஸ்தகங்கள், சாக்குக் கிறேயான்ஸுகள், பென்சில்கள், பேபர், சுதேசக் கத்திகள், சிலேட்டுகள், சிலேட்டுக்குச்சிகள் முதலிய இன்னும் அனேக சாமான்களும் சில்லறையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும். உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

**T. K. SUBRAMANIAM & SON,**

*Publishers, Book-Sellers & Stationers,*

*Dabir Square,* **KUMBAKONAM.**